# உபந்நியாசங்கள்.

இவை

தஞ்சை நகர்க் கரந்தைத் தமிழ்ச்சங்கத்து

இரண்டாவது ஆண்டுநிறைவு விழாவில்

நிகழப்பெற்றவை.

(தமிழவள் கமழ் மொழி - உ)

TRICHINOPOLY

THE WEDNESDAY REVIEW PRESS TRICHINOPOLY LTD.

1914

0-48

71120

# CERTIFICATE OF INCORPORATION.

NO. 1 of 1914—15.

I hereby certify, pursuant to Act XXI of 1860 of the Governor General of India in Council entitled 'An Act for the Registration of Literary, Scientific and Charitable Societies, 1860.', that the **'Karanthai Tamil Sangam'** Tanjore is duly incorporated as a Society under the aforesaid Act.

Office of the Assistant Registrar of Joint Stock Companies, Tanjore. Dated 1st May, 1914.

R. CHACKRAPANI ROW,
*Assistant Registrar of Joint Stock Companies.*

SEAL.

MAHAMAHOPADHYAYA DR. U.V. SWAMINATHA IYER LIBRARY MADRAS ADYAR

BUSINESS AGENCY Estd. 1900 TEPPAKULAM, TRICHY.

12906

# கரந்தைத் தமிழ்ச் சங்கம்,

## தஞ்சை.

பூவிற் பொலிதருபொன்னி நன்னாடாய், எவ்வளனும் செவ்வனே வாய்ந்து, ஒரு மொழியாய்த் தனை வளர்த்த தமிழைப் போற்றும் உறுகடனே ஒரு கடனாகக்கொண்ட சான்றோர் மல்கும் சோழவளநாட்டிற் சிறப்புறும் எஞ்சலில் சிறப்பின் தஞ்சை மாநகரின் கண்ணே ஒரு சார் கரந்தையம்பதியெனும் கரந்தட்டாங்குடியில், தமிழ்ப் பயிர்வளர்த்து, தமிழ் நன்மக்களை அடிக்கடி ஒருங்குகூட்டி. அவர் தம்முட் களித்து அன்புமிக்கு அளவளாவுந்துணையான் 'எல்லாப் பண்புந்தாங்குமொரு மொழிபேசு மதனை யெய்தும் தவிராத நட்பினைப்போல் தகுநட்பு' வேறில்லை யாதலைக் காட்டி, அவருள் ஒற்றுமை உண்டாக்கி, அவர்களை முன்னுக்குக் கொணர்தல் கருதி, விரோதிகிருது-௵ வைகாசி-௴ ௧௨ ஆகிய ஒரு நற்சுபதினத்தில் '**கரந்தைத் தமிழ்ச் சங்கம்**' என நற்பெயரோடு உற்பவித்த நம் சபை பிரமாதீச-௵ வைகாசி-௴ ௧௨ ஈராண்டு நிறைந்து மூவாட்டைப் பிராயத்திற் புக்கது. புகவே, யாமும் இறைவன் திருவருளால் மேன்மேலும் வளர்ந்தோங்கும் நம் சங்கத்

தின் இரண்டாவது வருடப்பூர்த்தித் திருவிழாக் கொண்டாட எண்ணினேமாக, அதுவும் பிரமாதீச-௵ ஆனி-௴ ௮, ௯, தேதிகளில், ஸ்ரீகந்தப்பச் செட்டியாரவர்கள் சத்திரத்தில், மிக்க விமரிசையாக நடந்தேறியது. அந்நாட்களில் எங்கள் வேண்டுகோட் கிணங்கி, கோயம்புத்தூர் ஹைகோர்ட்டு வக்கில் ஸ்ரீமான் டி. ஏ. இராமலிங்கம் செட்டியாரவர்கள், பீ. ஏ. பீ. எல்., அக்கிராசனம் ஏற்றுக் காரியங்களை நடைபெறுத்தினார்கள். அப்பொழுது நமது சங்க ஆதரிப்பாளருள் ஒருவராகிய ஸ்ரீமான் வா. கோபாலசாமி இரகுநாத இராசாளியாரவர்களும், இன்னும் தஞ்சையிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் பல கனவான்களும், புலவர்களும், விசயஞ்செய்திருந்தார்கள். சங்கத்தின் மற்றொரு ஆதரிப்பாளராகிய ஸ்ரீமான் சா. ரா. மு. சித. பெத்தாச்சி செட்டியாரவர்கள் தமக்கு நேர்ந்த சில அசௌகரியங்களை முன்னிட்டுத் தாம சபைக்கு வர இயலாமை குறித்து வருந்தியும், எந் நோக்கத்தினுஞ் சிறந்த நன்னோக்கமுடைய நம் சபை வளர்ந்தோங்குகவென வாழ்த்தியும் தந்திவிடுத்தார்கள். இன்னும் மதுரைத் தமிழ்ச்சங்கத் தலைவரவர்களும் பிற சில அபிமானிகளும் வாழ்த்துத் தந்திகளும் கடிதங்களும் அனுப்பியிருந்தார்கள். இரண்டு நாட்களும் இடமின்றி நெருங்கியிருந்து ஆவலுடன் சிறந்த வித்துவான்களது பிரசங்கங்களையும், எம்முயற்சி நலங்களையுங் கேட்டு மகிழ்ந்த நம்

தமிழ் நன்மக்கட்டொகுதியின் பெருமை காணா, நம் சகோதரர் இத்துணை அன்புடையராதலின் யாம் நாடிய பொருள் கைகூடி, எண்ணியஎண்ணி யாங்கு முட்டின்றி நடைபெறுவதிற் சிறிதும் ஐயமின் றெனப் பெரிதும் மகிழ்ந்தனம்.

முதல் நாளன்று பிற்பகல் சுமார் ௨௨ நாழிகைக் குப் புலவரும், சீமான்களும், பிறரும் கூடியிருந்த அளவில் சீமான் டி. ஏ. இராமலிங்கம் சேட்டியாரவர் கள் எழுந்தருளி, எமது சங்கத் தலைவரவர்கள் மூலமாக எங்கள் வேண்டுகோட்கிணங்கி அக்கிரா சனம் வகித்தார்கள். பின்னர் வித்துவான் கனம் இராமசாமி வன்னியரவர்கள் கடவுள் வழிபாடுசெய்த வுடன் பண்டிதர் கனம் உலகநாதபிள்ளையவர்கள், திருவநந்தபுரம் மகாராஜா கலாசாலையிற்றத்துவ போதகாசிரியராகவிருந்து காலஞ்சென்ற ஸ்ரீசுந்தரம் பிள்ளையவர்கள் எம். ஏ. இயற்றியருளிய கருங்கல் மனமுங்கரைந்துசக்காணவல்ல தமிழ்த்தெய்வவணக் கச் செய்யுளைக்கூறி அத்தெய்வத்தை வழிபட்டு, அச்செய்யுளுக்குரை கூறி விளக்கினார்கள். இவ்வ ரிய செய்யுள், ஒவ்வொரு தமிழர் வீட்டிலுமிருந்து தமிழ்த்தாயிடத்து அவர்க்குள்ள கடமையை ஞாப கப்படுத்திக் கொண்டிருக்கவேண்டுமெனக் கருதி, அச்சிட்டுப்பெற்று சபைவீற்றிருந்தார்க்கெல்லாம் உத வப்பெற்றது. இப்பால், சங்கத்தலைவரவர்கள் அற் றைக்கென்று தயாரித்துள்ள வரவேற்புச் செய்யுளைக்

கூறி, அக்கிராசனாதிபதியவர்களையும், சபையோரையும் உபசரித்து வரவேற்றார்கள். இச்செய்யுளும் அச்சிடப்பெற்றுத் தரப்பட்டது. இதன் பின்னர், அக்கிராசனாதிபதியவர்களின் அனுமதிகொண்டு நமது சங்கத்தின் இரண்டாமாண்டில் நடைபெற்ற முக்கிய விஷயங்களையும், வரவு செலவு விவரங்களையும் காட்டிய அறிக்கைப்பத்திரம் வாசிக்கப்பெற்றது. இதுவும் அச்சாகி யாவர்க்கும் கொடுக்கப்பெற்றது.

இதன் பின்னர், அக்கிராசனாதிபதியவர்கள் தமது முகவுரைப் பிரசங்கம் செய்தார்கள். பிறகு திரிசிரபுரம் செய்ன்ட் ஜோசப் கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் கனம் டி. சவரிராயப்பிள்ளையவர்கள் 'முச்சங்கவரலாறும், இறையனார் பொருளுரையும்' என்னும் விஷயத்தைப்பற்றியும்' பண்டிதர் கனம் உ நா. அப்பாசாமி ஐயரவர்கள், 'கல்விப்பயிற்சிக்குத் தாய் பாஷையே இன்றியமையாத் துணைக்கருவி' என்பதைப்பற்றியும், வியாசங்கள் படித்தபின்னர் அக்கிராசனாதிபதியவர்கள் இவ்விரண்டு விஷயங்களைப்பற்றியும் முடிவுரை கூறிச்சபையை அடுத்த நாட்கு மாற்றினார்கள்.

அடுத்தநாள் ஆதிவாரம் மாலை ௨௨½ நாழிகைக்குப் பின்னரும் சபைகூடிக் கனம் இராமசாமி வன்னியரவர்களால் 'கடவுள் வழிபாடு' ஆகிய பின்னர்க்கீழ்க் குறித்த விஷயங்கள் நிகழ்ந்தன:—

௩. சங்கநூற்பயிற்சி—வியாசம்: காட்டுப்புத்தூர் ஜமீன்தார் உயர்தரப்பாடசாலைத் தமிழாசிரியர் பண்டிதர் கனம் அ. கந்தசாமிபிள்ளையவர்கள்.

௨. நமது பழைய புதுச்சரித்திரம்—வியாசம்: பண்டிதர் கனம் ஐ. சாமிநாதமுதலியாரவர்கள்.

௩. தமிழரின் சமயநிலை—உபந்நியாசம்: பாளையங்கோட்டைச் சைவசபை யபைச்சர் பண்டிதர் கனம் வள்ளல் சோ. சிவஞானதேசிகரவர்கள்.

பிறகு இவ்விஷயங்களைப்பற்றி அக்கிராசனாதிபதியவர்கள் முடிவுரைகூறி முடித்தவுடன், சங்கத்தாரதுவேண்டுகோளால் திரிசிரபுரம் எஸ். பி. ஜி. கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் கனம் மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள், அக்கிராசனாதிபதியவர்களிடத்தும், பிரசங்கியார்களிடத்தும், மற்றும் சபை வீற்றிருந்தார்பாலும் சங்கத்தார்க்குள்ள நன்றியின் திறனையும், கடப்பாட்டினையும் விளக்கி அவர்கள் வந்தனத்தைச் செலுத்தினார்கள். செலுத்தியதும் சங்கத்தலைவரவர்கள் அக்கிராசனாதியவர்களுக்கும் பிரசங்கியார்களுக்கும், ஸ்ரீமான் வா. கோபாலசாமி இரகுநாத இராசாளியாரவர்களுக்கும், மாலையிட்டார்கள். மகாமாட்சிமைதங்கிய நமது அருமைச் சக்கர

வர்த்தியாருக்கு மும்முறை வந்தனம் செலுத்திச் சபை வீற்றிருந்தார்க்கெல்லாம் சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பெற்றுக் காரியங்கள் இனிது நிறைவுற்றன.

அன்பு மீக்கூர்ந்து நமது சங்கத்தின் பரிபாலனை மேற்ற அந்தமில் சீர்த்திச் செந்தமிழ்ச் செல்வர் ஸ்ரீமான் பெத்தாச்சி செட்டியாரவர்கள் நமது சங்கத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவுத் திருவிழாச் செலவு தமதாயிருக்கவேண்டுமென ஒரு நூறுரூபாய் உபகரித்தார்கள். அவர்கள்பால் சங்கத்தார்க்குள்ள நன்றியின் திறன் அளவிட்டுரைத்தற்பாற்றன்று. இப் பெருந்தகையாளரது செந்தமிழ்ப் பேரபிமானத்தைத் தமிழுலகம் என்றும் போற்றிப் புகழும் கடப்பாடுடைத்து. தமிழ் நாட்டுப்பிற ஸ்ரீமான்களும் இப்பேரறிவாளர் அடிச்சுவடு பற்றி ஒழுகும் கொள்கையராவார்களாக.

அக்கிராசனாதிபதியவர்கள் முகவுரைப் பிரசங்கத்துடன் மேற்குறித்த பிரசங்கங்கள் ஆறனுள்ளும் இப்பொழுது இப்புத்தகத்திற் பிரசுரிக்கப்பெற்றன நான்கே. பண்டிதர் கனம் சவரிராயப்பிள்ளையவர்கள் படித்த வியாசம் அவர்கள் எடுத்துக்கொண்ட விஷயத்தின் ஒரு பகுதியையே குறித்ததாகையால் முக்கியமான பிற்பகுதியையும் சேர்த்துத் தருவதாக வாக்களித்திருக்கிறார்கள். பண்டிதர் கனம் சிவஞா

னதேசிகரவர்கள் பிரசங்கித்த விஷயத்தை வியாசரூபமாய் எழுதித்தரும்படி அவர்களைப் பன்முறை கேட்டதும், அவர்களும் விரைவில் எழுதித்தருவதாய்ப் பன்முறை வாக்களித்தும் இதுகாறும் கிட்டாமையின், அவ்விஷயமும் இப்புத்தகத்தில் வெளிவரவில்லை.

சங்கத்து இயல்பும், பிரசங்கித்த புலவர்களது அருளும் பெருகின் முதல் வருஷோற்சவ காலத்து நடந்த பிரசங்கங்களும் புத்தகரூபமாய் வெளிவரும்.

ஒரு பாஷையே அதனைப் பேசுங்கூட்டத்தாரது சிறுமை பெருமைகளுக்குக் காரணமாகலானும், பாஷாபிவிருத்தியே அப்பாஷைக்குரியாரது அபிவிருத்திக்கோர் அறிகுறியாகலானும், நம் பண்டைத் தமிழின் சிறப்பினைக்கொண்டு, பண்டைத் தமிழரது உயர்வு ஆராய்ந்தறியப் படுகின்றதாகலானும், ஆயினும் பிந்தியகால மொழி நிலையினையும் ஆராய்வுழி நமது தெய்வத்தமிழ் மொழியின் முன்னர்ச்சிறப்பும், பின்னர்த் தாழ்வும் வெள்ளிடை விலங்கலாகி, நமது எற்றத்தாழ்வு வெளிவருகின்றதாகலானும் பாஷாபிமானத்திற் சிறந்த நம் அருந்தமிழ்ச் சகோதரர்கள் நம் தாய்மொழியாம் தமிழ் மொழியின் சீரும், சிறப்பும், அழகும், ஆற்றலும் உணர்ந்து, அத்தகைச் செம்மொழியடைந்த கேவல நிலையை எண்ணி ஏங்கி, சிறிது கம்மலுற்றிருக்கும் தம்பேராபிமா

னச்சுடர் தூண்டப்பெற்றாய், பிறமொழிகளினும் நம் தமிழ் மொழிக்குள்ள ஏற்றமுணர்ந்து, தமிழ் மொழியினிடத்துத் தமக்குள்ள அருங்கடனை அறிந்து நம்மொழியின் மேம்பாட்டுக்கென ஊக்கங் கொண்டு உழைக்கவேண்டுமெனும் ஆதரங்கொண்டு, தமிழ்மொழியின் பெருமையை எடுத்துரைக்கும் வாழ்த்துச் செய்யுட்கள் சிலவற்றையும் இப்புத்தகத்திற் சேர்த்துள்ளோம்.

இதுகாறும்போல இனியும் தமிழபிமானிகள், தங்கடனோர்ந்து எங்களுக்குதவி, எம்மருமுயற்சியினெம்மையூக்கி எம் நோக்கம் முற்றுறச்செய்வார்களாகவென இறைவன் திருவருளைச் சிந்திக்கின்றேம். சுபம்.

கரந்தைத் தமிழ்ச்சங்கம்
தஞ்சை.
ஆனந்த-ஸ்ரீ ஆனிமீ ௩௳.

R. வேங்கடாசலம்,
காரியதரிசி.

## அக்கிராசனாதிபதியவர்கள்

# முகவுரைப் பிரசங்கம்.

(கனம் T. A. இராமலிங்கஞ்செட்டியாரவர்கள் B.A., B.L.)

---

கனவான்களே!

கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் இரண்டாவது வருஷக்கொண்டாட்டத்தின்போது அக்கிராசனம் வகிக்கும்படி உங்கள் சபைத்தலைவர் என்னைக் கேட்டபோது அதற்குத்தகுந்த கல்வியும் ஆற்றலும் இல்லாதவனாகையால் நான் அதை ஏற்றுக்கொள்ளப் பின்வாங்கினேன். ஆயினும் எனக்குத் தமிழ்ப் பாஷையினிடத்துள்ள பக்தியாலும் சிநேகிதர்கள் சிலரின் கட்டாயத்தாலும் கடைசியாகத் தங்கள் தலைவர் வேண்டுகோளுக்கு இணங்கினேனேயன்றி வேறல்ல. இவ்விடம் வந்து இங்கே கூடியிருக்கும் வித்வான்களைப் பார்க்கும்போது அவர்களில் யாராவது நான் இப்போது அங்கீகரித்திருக்கின்ற ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டிருந்தால் நலமாகவிருக்குமென்றும் நான் அதை வகிக்க ஒத்துக்கொண்டது சரியல்லவென்றும் தோன்றுகிறது. நான் கோங்கநாட்டான். கொங்கனென்னும் சொல்லே என் நாட்டில் கல்வி எவ்வளவு அரிதான விஷயம் என்பதைக்காட்டு

நிற்கும். அப்படியிருக்க கொங்கநாட்டினன் ஒருவன் தமிழ் மொழியின் தாய்வீடான சோழமண்டலத்தின் மத்திய ஸ்தானத்தில் கூடும் கூட்டத்தில் முதல் ஸ்தானத்தை வகிப்பது நகைப்பை உண்டுபண்ணும். ஆயினும் எனக்குத் தமிழ்ப் பாஷையினிடத்து இருக்கும் பக்தி யொன்றையே கிரகித்து என்னை ஆதரித்து இந்தக் கூட்டம் இனிது முடிய உதவி செய்யவேணுமாய்க்கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்முடைய தமிழ்ப் பாஷையின் தற்கால நிலைமை பரிதாபப்படத்தக்கதாக இருக்கிறது. கொஞ்சக் காலத்திற்கு முன்வரை நம்தேசத்துக் கலாசாலைகளில் படிக்கும் மாணாக்கர்களில் பெரும்பான்மையோர் தங்கள் பள்ளிக்கூடங்களில் பாடமாகவாவது தமிழ் நூல்கள் சிலவற்றை வாசிக்கவேண்டியிருந்தது. இப்போது சர்வகலாசங்கத்தார் (University) செய்திருக்கும் புது ஏற்பாட்டின்படி நம்தேச பாஷைகள் பள்ளிக்கூடங்களில் படிப்பதே நின்றுபோகும்போல் இருக்கிறது. நாம் எவ்வளவுக்கு உயர்தரப் பரீக்ஷைகளுக்கு ஆங்கிலபாஷை படித்தபோதிலும் நம் ஜனங்கள் ஆங்கிலபாஷையை சுயபாஷையாக ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அவர்களுக்குத் தெரியவேண்டிய விஷயங்களை சுயபாஷையாகிய நம் தேசபாஷைகளில்தான் சொல்லவேண்டியிருக்கிறது. முன் அவசியமான பாடமாக மாணாக்கர்கள் நம் தேசபாஷைகளிலுள்ள நூல்களைப் படித்தபோதுகூட அவர்கள் தங்

கள் அபிப்பிராயங்களைத் தேசபாஷைகளில் வெளியிடக்கூடாதவர்களாக இருந்தார்கள். இப்போது மாணாக்கர்களின் ஸ்திதி என்னவாக இருக்கும்? ஆங்கிலேயர்கள் தங்கள் தேசத்தில் சுயதேசபாஷை தனியாகப் படிக்கப்படுவதில்லையென்று கேட்கிறார்கள். அவர்கள் தங்கள் நாட்டில் படிப்பெல்லாம் சுயபாஷையிலேயே படிக்கப்படுகிறதென்பதையும் அவர்கள் பொதுஸ்தானங்களில் பேசுவது சுயபாஷையிலேதான் என்பதையும் மறந்துவிடுகிறார்கள். நம் தேசத்திலோவென்றால் நம் மாணாக்கர்களின் படிப்பெல்லாம் ஆங்கிலத்தில்தான் படிக்கப்படுகிறது. பொது ஸ்தானங்களில் பேசுவதெல்லாம் ஆங்கிலத்தில். ஆகையால் நம் சுயபாஷைகள் தனியாகப் படிக்கப்பட்டாலல்லாமல் அவைகள் சீர்குன்றிக்கெட்டுப்போவதைத் தடுக்கமுடியாது. மேலும் சுயபாஷைகளை மாணாக்கர்கள் படிக்காவிட்டால் படித்தவர்களுக்கும் படிக்காதவர்களுக்கும் இப்போது அதிகமாக இருக்கும் வித்தியாசம் இன்னும் அதிகப்படும். அவர்கள் வேறு, இவர்கள் வேறு என்று சொல்லக்கூடியதாகப் போய்விடும். ஆகையால் இப்போதே நாம் முயற்சி செய்து நம்முடைய பாஷை க்ஷீணதசை யடையாமலிருக்கும் பொருட்டும் நம் ஜனங்களுக்குள் படித்தவர்களுக்கும் படிக்காதவர்களுக்கும் ஒற்றுமையின்றிப் பிரிவினை ஏற்ப

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

டாமலிருக்கும் பொருட்டும், கலாசாலைகளில் மாணுக்கர்களை சுயதேசபாஷைகளைப் படிக்கும்படி ஏற்பாடு செய்யப் பிரயத்தினம் செய்யவேண்டும்.

நம் தமிழ்ப்பாஷையானது உலகத்தில் இப்போது முன்னுக்கு வந்திருக்கும் பாஷைகளில் அநேகம் ஈனஸ்திதியிலிருந்தபோது வெகு உன்னத பதவி பெற்றிருந்தது. அதன் இலக்கணங்களும் இலக்கியங்களும் வெகு காலத்துக்குமுன்னெழுதப்பட்டவை. அநேக தமிழ் வித்வான்கள் ஆராய்ச்சி செய்து தமிழ்ப் பாஷை உன்னத நிலைமை அடைந்த காலம் கிறிஸ்து பிறந்த முதல்நூற்றாண்டிலென்று கண்டுபிடித்திருக்கிறார்கள். அப்படியிருக்க நம் பாஷையானது பிற்காலத்தில் க்ஷீணதசையடைந்து இப்போது நாம் காணுகிறபடி கேவலஸ்திதியிலிருப்பானேனென்று சிறிது விசாரிப்போம்.

தமிழ்த் தொல்லாசிரியர்கள் தங்கள் நூல்களில் கூறும் விஷயங்களை இரண்டு பிரிவாகப்பிரித்திருக்கிறார்கள். ஸ்திரீ புருஷர்களுக்குள் ஏற்படக்கூடிய காதல், அதற்குக்காரணமானவை, அதன் காரியமாகப்பின் நிகழ்பவை இவற்றையெல்லாம் சேர்த்து 'அகம்' என்று பெயர் கொடுத்தார்கள். இதற்குக் காரணம் காதல் என்கிற வார்த்தை சொல்லக்கூடுமேயன்றி அது இப்படித்தான் இருக்கிறது என்று வெளிப்படையாக ஒருவன் சொல்லி இன்னொருவன்

தெரிந்துகொள்ளக்கூடாமல் அவனவனே அனுபவித்தறிந்துகொள்ளவேண்டியதாக இருக்கிறதினாலே அகம் என்ற பெயர் ஏற்பட்டது. மற்றவைகளெல்லாவற்றையும் சேர்த்துப் 'புறம்' என்று பெயர் கூறினார்கள். ஏனெனில் அவைகள் புறத்தே நிகழ்வன அன்றி அவைகள் இத்தன்மைத்தென்று கூறப்பட்டு எளிதில் பிறரால் அறிந்துகொள்ளக்கூடியவை. இப்படி அவர்கள் இரண்டு பிரிவாக விஷயங்களைப் பகுத்ததோடு நில்லாது அவை ஒவ்வொன்றையும் எவ்விதமாக நூல்களில் சொல்லலாமென்று தீர விசாரிக்க ஆரம்பித்தார்கள். இப்படி விசாரிப்பதில் மனம்போனபடி நடக்காத காரியங்களை யோசிக்கவில்லை. ஒவ்வொரு காரியமும் எத்தனை விதமாகப்பின்னால் திரும்பக் கூடும், எப்படி முடிய என்ன காரணங்கள் வேண்டும், என்று உலகத்தில் நடைபெறுகிறபடி யோசிக்க ஆரம்பித்து ஒவ்வொரு காரியத்துக்கும் எத்தனை காரணங்கள் இருக்கக்கூடும், அவற்றில் எவையெவை அவசியம், அப்படி ஏற்படக்கூடிய காரியங்கள் பின் எந்தெந்த காரியங்களுக்குக் காரணமாக இருக்கும் என்று ஆராய்ச்சி செய்தார்கள். இந்த ஆராய்ச்சியின் பயன்தான் நமக்குப் பொருளதிகாரமாகக் கிடைத்திருப்பது. இம்மாதிரி ஆராய்ச்சி வேறெந்தேசத்திலும் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. நம் பொருளதிகாரம் போன்ற நூல் வேறெந்த பாஷையிலும் இருப்பதாக எனக்குத் தெரியாது. இந்த ஆராய்ச்

சியில் மனிதன் மனதில் உண்டாகக்கூடிய எல்லாவித மான எண்ணங்களும், அதற்குக்காரணமான ஆவல்களும், அவைகளின் காரியமான அவன் வெளி நடவடிக்கைகளும், எடுத்து ஆளப்பட்டிருக்கின்றன. இக்காலத்து ஆராய்ச்சியில் கைதேர்ந்த ஸ்பென்சர் (Spencer) ஆகியாரும் வியக்கத்தக்கவிதமாய் ஸ்திரீ புருஷர்களுக்குள் ஏற்படக்கூடிய காதலையும், அதன் காரண காரியங்களையும், ஆராய்ச்சி செய்திருக்கின்றனர். முதலில் ஒருவர்மீது ஒருவர் காதல்கொண்ட புருஷனும் ஸ்திரீயும் புணர்தலும், அதற்குக்காரணமான காதலுக்கு வழித்தான காண்டல் முதலியவற்றையும் கூறிப் பின் கூடினவர் பிரிதல் அவசியமாதலின் அதையும், அதற்குக்காரணங்களையும்சொல்லி, திரும்பியும் அவர்கள் சேர்ந்து இருந்து இல்லறம் நடாத்தலையும், அது எவ்விதம் கைகூடுமென்பதையும் ஆராய்ந்து இல்வாழ்க்கையில் எல்லாம் சுகமாகவே யில்லாமல் சில அசுகமான காரியங்களும் இருப்பதாலும், இல்லறம் நடத்தப்பொருள் முதலியன வேண்டலாலும், மனிதனாகப்பிறந்தவன் உலகிற்குச் செய்யவேண்டிய கடமைகள் பல இருப்பதாலும், காதலர் இருவரும்பிரியவேண்டியிருப்பதால் அதற்கு அவர்கள் இரங்கலைப்பற்றிக் கூறிக்கடைசியாக அன்பினர் இருவர் அவ்வன்பு காரணமாகவே ஒருவரையொருவர் சரியாக அர்த்தம் செய்து கொள்ளாது ஊடலும், அவ்வன்பின் வகைத் தானதாகையால் அதையும், அதற்குக் காரணங்களை

யும் பற்றிக்கூறியுள்ளார்கள். இது மனிதனின் உள்ளத்துணர்ச்சியின் ஆராய்ச்சியாகக் கொண்டால் மிக ஆச்சரியப் படத்தக்கதாக அக்காலத்தில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளில் ஒன்ருக நாம் எடுத்துக்கொள்வோம். இக்காலத்திலும் நாம் அந்த ஆராய்ச்சியில் தப்பிப்போனதாகத் திருத்தக் கூடியதொன்றுமில்லை. தொல்காப்பியம், இறையனாகப்பொருள் ஆகிய இரண்டும் நம்முன்னோர்களால் நமக்கு விடப்பட்ட பெரும் சொத்துக்கள் என்பதில் தடையில்லை. இதே மாதிரியாக மற்ற விஷயங்களையெல்லாம புறப்பொருள் என்று பெயர் கொடுத்து ஆராய்ச்சி செய்திருக்கிருர்கள். மனிதன் உள்ளத்துணர்ச்சி எப்போதும் ஒரேமாதிரியாக நடைபெறக்கூடியதாக இருப்பதால் அதில் முன் ஆராய்ச்சிக்கு வித்தியாசமாக நமக்கு இப்போதும் தோன்றவில்லை. ஆனல் வெளி விஷயங்கள் மாறிக்கொண்டே இருக்கின்றன. அக்காலத்து நடவடிக்கைகளுக்கும் இக்காலத்து நடவடிக்கைகளுக்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கிறது. மேலும் வெளி விஷயங்கள் மிகப்பல. ஆகையால் வெளிவிஷயங்களைப் புறப்பொருளியலில் அவர்கள் ஆராய்ச்சி செய்தது முடிவானது என்று சொல்ல இடமில்லை. அது தெரிந்தே வெளி விஷயங்களை அவர்களும் அதிகமாக ஆராய்ச்சி செய்யவில்லை. புறத்திணையியலில் வெளி விஷயங்களில் எக்காலத்தும் மனிதனுக்கு ஒரு விதமான மயக்கத்தைத் தன்னிடத்துக்கொண்ட மண்

நகையாலும் பொருள் நகையாலும் ஏற்படுகிற போரைப்பற்றி ஐந்து திணைகளில் சொன்னார்கள். அக்காலத்துப் பொருள்களில் முக்கியமானவை மாடுகள். ஆகையால் ஆகோள் முக்கியமானதாகச் சொல்லப்பட்டது. இங்கேயும் ஒரு அரசன் இன்னொருவன் பேரில் படையெடுத்துச் செல்வது முதல் வெற்றி பெறுவது அல்லது தோல்வியடைவது வரை எல்லா விஷயங்களையும் அவைகள் ஒன்றின்பின் ஒன்றாக நடக்கும் விதத்தையும் ஆராய்ந்து வெகு நன்றாகச் சொல்லியிருக்கிறார்கள். போரொன்றையே பற்றி விரிவாகச் சொன்னாலும் மற்ற பிரவர்த்திகளிலும் மனவெழுச்சியும் மனப்போக்கும் இப்படித்தான் ஊக்கத்தால்தான் இடையூறுகளுக்குப் பயப்படாமல் காரியசித்தியடையவேண்டுமென்பது தோன்றவாகைத் திணை கூறாமிடத்தது,

> "தாவில் கொள்கைத்தத்தங்கூற்றைப்
> பாகுபடமிகுதிப்படுத்தலென்ப"
>
> (—தொல்காப்பியம்: புறத்திணை 76)

என்று தொல்காப்பியர் சொல்லிப் போனார். மற்ற விஷயங்களையெல்லாந் தனித்தனியாக எடுத்து ஆராய்ந்துகூறுதல் முடியாததலின் இம்மாதிரியாக மனிதர்கள் செய்யும் தொழில் முயற்சிகளைச் சொல்லிவிட்டு ஒருவன் மற்றவனை, அவன் குலம், செல்வம், குணம் முதலியன காரணமாகப் புகழ்வ

தைப் பாடாண்டிணையென்று தனியாக வகுத்து விட்டு விஷயங்களின் உண்மையைத் தெரிந்து சொல்வதற்குக் காஞ்சித்திணையென்று பெயர் கொடுத்தார்கள். உலக நிலையாமை முதலிய தத்துவ ஞானங்களெல்லாம்வீடுபேற்றுக்குக்காரணமாய்க்கடைசியாகச் சொன்ன காஞ்சித்திணையிலடங்கும். இமமாதிரியாக உள்ளத்துணர்ச்சிகளையும், வெளித்தோற்றங்களையும், அவைகளின் தத்துவங்களையும் பாகுபடுத்தி விட்டார்கள். இப்பாகுபாடு இயற்கையில் நடக்கும் விஷயங்களை ஆழயோசித்துச் செய்யப்பட்டதாகையால் இயற்கை விஷயங்களைப் பார்த்துப் பாட்டு எழுதும் ஆசிரியர்கள் நூல்களெல்லாம் இவற்றிற்கு விரோதமாக இருக்கமாட்டா. இலக்கியம் எழுதினவர்கள் அந்தக்காலத்து வெளிவிஷயங்களைப் பார்த்து உள்ளதுள்ளபடி எழுதினார்களேயன்றி இலக்கண நூல்களைப்பார்தது வீட்டில் இருந்துகொண்டு கவி கட்டவில்லை. ஆகையால் அக்காலத்துப் புலவர்கள் எழுதியுள்ள நூல்களை வாசிக்கும்போது நமக்கு அவர்கள் வர்ணிக்கும் ஒவ்வொன்றும் கண்முன நிற்பதுபோலத் தோன்றுகிறது. மேலும் அவர்கள் இயற்கையில் நடப்பவைகளுக்குக் கொஞ்சமும் வித்தியாசமின்றி எவ்வளவு அழகாக வர்ணித்திருக்கிறார்கள்! குறிஞ்சிப்பாட்டில்,

(54 முதல் 106)

'அண்ணனெடுங்கோட்டிழிதருதெண்ணீ
ரவிர்துகில் புரையுமவ்வெள்ளருவித்

தவிர்வில் வேட்கையேந் தண்டாதாடிப்
பளிங்குசொரி வன்னபாய் சுனைகுடைவுழி
நளிபடுசிலம்பிற் பாயம்பாடிப்
பொன்னெனறி மணியிற் சிறுபுறந்தாழ்ந்தவெம்
பின்னிருங்கூந்தல் பிழிவனைந்துவரி
யுள்ளகஞ்சிவந்த கண்ணேனம் வள்ளித
ழொண்செங்காந்தள் * * * *
* * * * * * * *
* * * மலிவன மறுகி
வான்கண் கழ்இய வகலறைக்குவைஇப்
புள்ளாரியத்த விலங்குமலைச்சிலம்பின்
வள்ளுயிர்த் தெள்விளியிடை யிடைப்பயிற்றிக்
கிள்ளையோப்பியுங் கிளையிதழ்பரியாப்
பைவிரியல்குற் கொய்தழைதைஇப்
பல்வேறுருவின் வனப்பமைகோதையெம்
மெல்லிருமுச்சிக் கவின்பெறக்கட்டி
யெரியவிருருவினங்குழைச்செயலைத்
தாதுபடுதண்ணிழ லிருந்தனமாக'

என்று சிறு பெண்கள் அருவியிற்சென்று குடைந் தாடிப்பாடி வெளியில் திரிந்து பூக்கொய்து கட்டி அணிந்து இருந்ததை எவ்வளவு நன்றாகவும் உள்ள துள்ளபடியும் அவர் சொல்லியவிஷயம் நம் கண்முன் அப்படியே தோன்றும்படியும் கூறப்பட்டிருக்கிறது. இதே விஷயத்தை நம் பிற்காலப்புலவர் கூறுவதானால் பெண்கள் வருணனையும், சுனைவருணனையும், பூக்கள் மரங்கள் வருணனையுமாகச் சேர்த்து அவைகளின் இயற்கையமைப்பைக் கெடுத்து அழகு குன்றும்படி

யாகச்செய்துவிடுவார்கள். மேலும் வெள்ளருவிக்கு
அவிர்துகிலையும், அசோகினது தளிர்க்கு எரியவிர்
உருவினையும் உவமித்திருப்பது எவ்வளவுக்குத்தெளி
வாகத் தெரியக்கூடியதாக விருக்கிறது! குறிஞ்சிப்
பாட்டிலேயே கீழே தலைவன் வந்தவன் பேச ஆரம்
பிக்க அவன் முன்னறியாதவனாகையால் அவனிடத்து
மனஞ்சென்றாய் பேசத்தைரியம் பெறாது இருப்பதை,

அதனெதிர்
சொல்லேமாதலினல்லாந்துகலங்கி'

என்றும் பின் யானை வந்ததாக அதனைத்தப்பும்படி
அவனிடம் சேர்ந்து அவன் அதை வெருட்டினபின்
'சுடர்நுதனீவி'ப்பேச ஆரம்பித்தனனாக, அபாயகா
ரணமாகத் துறக்கப்பட்ட நாணம் திரும்பியும் வந்து
வருத்த அவள் அவன் கையைவிட்டுத் தப்பித்தோட
முயல, அது தெரிந்து அவளை விடாது அவன் தன்
னோடு சேர்த்து அணைத்துக்கொண்டதை,

அந்நிலை
நாணுமுட்கு நண்ணுவழியடைதர
வொய்யெனப்பிரியவும் விடாஅன் கவைஇ
யாகமடைய முயங்கலின்

என்றும் கூறியிருப்பது எவ்வளவுக்கு கபிலர் மனி
தவியற்கையையும் அவர்கள் சமயங்களில் செய்யக்கூ
டிய காரியங்களையும் அக்காலத்து நிகழும் உள்ளத்
துணர்ச்சியையும் தெரிந்தவரென்பதைக் காட்டுகிறது.

நெடுநல்வாடையில் கார்வந்ததை,

'ஆர்கலிமுனை இய கொடுங்கோற்கோவல
ரேறுடையினநிரைவேறுபுலம்பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக்கோட
னீடிதழ்க்கண்ணி நீரலைக்கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலியப்பலருடன்
கைக்கொள்கொள்ளியர் கவுள்புடையூஉநடுங்க
மாமேயன் மறப்பமந்திகூரப்
பறவைபடிவன வீழக்கறவை
கன்றுகோளொழியக் கடியவீசிக்
குன்றுகுளிர்ப்பன்னகூதிர்ப்பானாள்.

என்று வர்ணித்திருப்பது நாம் வெளியில் கிராமங்களில் போய்ப்பார்த்தால் எப்படியிருக்குமோ அப்படியில்லையா? கீழே பட்டணத்தில் கார்காலத்துக் காலம்போக்குவதையும், அங்கே பொழுதுகூடத்தெரியாதிருப்பதையும் எவ்வளவு நன்றாக வர்ணித்திருக்கிறார்.

'படலைக்கண்ணிப்பரேரெறுழ்த்திணிதோண்
முடலையாக்கைமுழுவலி மாக்கள்
வண்டுமூசு தேறன் மாந்திமகிழ்சிறந்து
துவலைத்தண்டுளி பேணார்பகலிறந்
திருகோட்டறுவையர் வேண்டுவயிற்றிரிதரு'

கின்றனர் என்று நன்றாகக் கவனித்து எழுதியிருக்கிறார். பட்டினப்பாலையில் வியாபாரிகளின் சிறப்பைச் சொல்லுங்காலத்து,

'புண்ணியமுட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக்
கொடுமேழி நசையுழவர்
நெடுநுகத்துப்பகல்போல
நடுவுநின்றநன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும்பிறவுமொப்பநாடிக்
கொள்வதூஉமிகை கொளாது கொடுப்பதூஉங் குறைகொ
பல்பண்டம் பகர்ந்துவீசும்——' [டாது

வியாபாரிகள் என்று சொல்லியிருக்கிறார். எந்த வியாபாரிதான் இதைவிட அதிகமான சிறப்பு வேண்டுமென்று கேட்கக்கூடும். வியாபாரம் இனிது நடக்கவும் வியாபாரிகள் புகழ் பரவவும் அவர்கள் செய்ய வேண்டியதிது தானென்று குறித்தாய்விட்டது. எக்காலத்துக்கும் அவர்கள் நல்வழி இதுதான் என்று அறுதியிட்டாய்விட்டது. துறைமுகத்து வரும் சரக்குகளைப் பார்த்து அவைகளுக்கு விலாசமிட்டு சுங்கம் வசூலிப்பதை,

'நல்லிறைவன் பொருள்காக்குந்
தொல்லிசைத் தொழின்மாக்கள்
காய்சினந்த கதிர்ச்செல்வன்
தேர்பூண்டமாஅபோல
வைகறொறுமசைவின்றி
யுல்குசெயக்குறைபடாது
வான்முகந்த நீர்மலைப்பொழியவு
மலைப்பொழிந்த நீர்கடற்பரப்பவு
மாரிபெய்யும் பருவம்போல
நீரினின்று நிலத்தேறவு

*நிலத்தினின்று நீர்பரப்பவு*
*மளந்தறியாப் பலபண்டம்*
*வரம்பறியாமை வந்தீண்டி*
*யருங்கடிப் பெருங்காப்பின்*
*வலியுடைவல்லணங்கினோன்*
*புலிபொறித்துப் புறம்போக்கி."*

என்று வர்ணித்திருப்பது நாம் இன்றும் கடற்கரைப் பட்டினங்களிலுள்ள சுங்கவீட்டில் (Customs House) பார்ப்பதை ஞாபகத்துக்குக் கொண்டு வரவில்லையா? வியாபாரத்தில் சரக்குகள் விளைந்த இடத்தை விட்டு வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்தும் சரக்குகள் இந்த இடத்துக்குக் கொண்டுவரப்படுவதை கடலிலுள்ள நீர் ஆவியாகக் கிரகிக்கப்பட்டு மேகங்களாகப் போய் மழைபெய்து பெய்த ஜலம் திரும்பிக்கடலுக்கு வந்து சேருவதற்கு உவமித்திருப்பது எவ்வளவு நன்றாகயிருக்கிறது. நான் மேலே எடுத்துக்காட்டியவைகளில் இல்பொருளுவமம் ஒன்றாவதிருக்கிறதா பாருங்கள்! வெளியிலிருக்கப்பட்ட விஷயங்களையும் மனிதர்களுக்குள் ஏற்படக்கூடிய மன உணர்ச்சிகளையும் நன்றாகத்தெரிந்து அவைகளை மற்றவர்கள் தெளிவாக இருந்தபடி தெரிந்துகொள்ளும்படி வர்ணித்திருக்கிறார்கள். அவர்கள் உவமை முதலிய அணிகளை உபயோகப்படுத்தியிருப்பது வெறும் அலங்காரத்துக்காக இல்லாமல் சொல்லும்பொருளை எளிதில் அர்த்தப் படும்படியாகச்செய்கின்றது.

பின்னால் வந்த புலவர்கள் முன்னோர்கள் வழக்கத்தையறியாது அவர்கள் வழியை விட்டுவிட்டுப் பாட்டுக்கட்டத் தொடங்கினார்கள். அவர்கள் பாட்டுக்கும் முன்னோர்கள் பாட்டுக்கும் உள்ள வித்தியாசம் முன் கண்ணாடிகளில் எழுதின படம் விற்றார்களே அதற்கும் இப்போது ரவிவர்மா அவர்கள் எழுதின படங்களுக்கும் உள்ள வித்தியாசந்தான். இதற்குக்காரணம் பல. ஒரு தேசம் வளப்பம் பெற்று வலியோங்கி முக்கியத்தை அடையுங்காலத்து அத்தேசத்திய ஜனங்கள் மனவெழுச்சி யுடையவர்களாய் எல்லாத்தொழில்களிலும் பிரவர்த்தித்து அவ்வெல்லாத்தொழில்களிலுமே சாமர்த்திய முடையவர்களாய்ப் புகழ்பெறுவார்களென்பதும், ஒரு தேசம் வளப்பமும் வலியுங் குறைந்து க்ஷீணதசையடையும்பொழுது அதில் நடக்கும் தொழில்களும் க்ஷீணதசை யடையுமென்பதும் எல்லாரும் ஒப்பமுடிந்ததோர் கொள்கையாகும். பத்துப்பாட்டாதிய நூல்கள் எழுதப்பட்ட காலத்துத்தான் தமிழர் தங்கள் பெருமையின் வரம்பை எட்டியது. அந்தக்காலத்துக்குப்பின் க்ஷீணதசையடைய ஆரம்பித்தார்கள். கொஞ்சக்காலம் ஒரு ராஜ்யமும், பின் கொஞ்சக்காலம் மற்றொரு ராஜ்யமுமாக முன்னுக்கு வரத் தமிழ்நாட்டார் தங்களுக்குள் போட்டி போட்டுக்கொண்டிருந்தார்களே யல்லாமல் அவர்கள் பொதுவாக முன்னுக்கு வரவில்லை. சீக்கிரத்தில் அவர்கள் வலிகுன்றி உதவிக்கு இலங்கை அரசர்களையும்

வடக்கிலிருந்த அரசர்களையுங் கூப்பிட ஆரம்பித்துவிட்டார்கள். அவர்கள் வியாபாரமும் பற்று கைகளுக்குப் போய்விட்டன. பலசாலியான அரசர்கள் அடுத்து இருந்து தாக்காததால் அவர்கள் மகம்மதியர்கள் வரும் வரை சுய அரசாட்சி பெற்றிருந்தார்களையன்றி வேறல்ல. ஆகையால் பின் காலத்தில் தமிழர்கள் பலஹீனர்களாய் எல்லாப்பிரவர்த்திகளிலும் ஊக்கங் குன்றினவர்களானார்கள். நூல்கள் எழுதுவதில் மற்றப் பிரவர்த்திகளைப்போலவே உயர்ச்சிபெறாமல் தாழ்வடைந்திருந்தார்கள். இத்தோடுகூடத் தொல்லாசிரியர்கள் பெருமையே கெடுதலுக்குககாரணம் ஆயிற்று. அவர்கள் இலக்கணங்களின் பெருமையைப் பார்த்து அதில் ஈடுபட்டு இலக்கியங்கண்டதற்கு இலக்கணங்கூறவேண்டுமென்பதைவிட்டு இலக்கணத்துக்குச் சரியாக அளந்து வைத்துக்கொண்டு கவிகட்ட ஆரம்பித்தனர். தொல்லாசிரியர் மரபை அனுசரித்து எப்படியெப்படி நூல்கள் செய்யவேண்டுமென்று விதிகள் ஏற்படுத்திவிட்டார்கள். உவமானம் இன்னதுதான் இன்னதற்குச் சொல்லவேண்டுமென்று வரையறுத்து உவமான சங்கிரகம் முதலிய நூல்கள் எழுதப்பட்டன. ஆகவே, வெளியில் இயற்கையாய் நடப்பவைகளையும், மனிதன் மனதில் உண்டாகும உணர்ச்சிகளையும் கவனித்துப் பார்த்து எழுதுவது போய் வீட்டில் இலக்கணங்களையும், உவமான சங்கிரகத்தையும், அகராதியையும், நிகண்டையும் வைத்

து க்கொண்டு நூல்கள் எழுதினார்கள். இவையெல்லாம் போதாதென்று அந்தக்காலத்துப் பௌத்தமதமும், சைனம் முதலியன அருகிச்சைவம், வைணவம் முதலிய இந்துமதங்கள் பரவ ஆரம்பிக்கவே அம்மதங்களுக்கு வேர் சமஸ்கிருத பாஷையில் உபநிஷத்துக்களில் தேட ஆரம்பித்தார்கள். வேதாந்த சித்தாந்த சாஸ் திரங்களுக்காக சமஸ்கிருத பாஷைக்குப் போனவர் கள் அத்தோடு நிற்காமல் எல்லா விஷயங்களுக்குமே சமஸ்கிருதம் ஆரம்பம் என்றும், சமஸ்கிருதத்தில காணாதவைகளைத் தவிர்க்கவும், அதில் கூறியவைகளைக் காரணம் பாராது போற்றவும் ஆரம்பித்தனர். மற்ற விஷயங்களில்போலவே தமிழ்நூல் யாத்தலி லும் சமஸ்கிருதக் கதைகளையும், சமஸ்கிருத விதி களையும், சமஸ்கிருத வார்த்தைகளையும் அதிகமாக உபயோகிக்க ஆரம்பித்தார்கள். சமஸ்கிருத சம் பந்தமாத்திரம் இருந்திருக்குமாயின் ஒருக்கால் ஐரோப்பிய தேசங்கள் சிலவற்றில் சிலபாஷைகள் உயர்ச்சிபெற்றதுபோல தமிழிலும் அக்காலத்துச் சில நூல்கள் எழுதப்பட்டிருக்கலாம். ஆனால் மேற்சொன்ன காரணங்களெல்லாம் ஒருங்குதிரண்ட படியால், சமஸ்கிருத சம்பந்தம் மதவிஷயமாக முதலில் ஏற்பட்டு அதனால் ஒருவிதமான முரட்டு பக்திக்கு இடங்கொடுத்து தமிழர்கள் சுயமாகத் தங் கள் அறிவை உபயோகப்படுத்துவதையே கெடுத்து

விட்டது. நம்முடைய தமிழ்ப்பாஷையின் பிற்காலத்திய சரித்திரத்தைப்போலவே மற்ற பாஷைகளும் சிலகாலங்களில் விருத்திகுன்றி இருந்திருக்கின்றன. உதாரணமாக, இங்கிலாந்துதேசத்தில் கிராம்வெல் (Cromwell) காலத்துக்குப் பின் பழைய அரசகுலமே ஸ்தாபிதமான காலத்தில் இப்படியாகத் தான் ஜனங்கள் வலிகுன்றியிருந்தனர். பிராஞ்சு பாஷையில் ஜனங்கள் மூடபக்தி கொண்டனர். நம்மைப்போலவே அவர்களும் பழைய நூல்களில் கண்டதுதான் சரியென்று விதிகள் நிருமாணிக்க ஆரம்பித்தார்கள். அதன் முடிவு ஒரு நூறு வருஷத்திற்குமேல் ஆங்கிலேய பாஷையும் வளர்ச்சிகுன்றியிருந்தது. நம்தேசத்தில் இம்மாதிரியான காலம் சிந்தாமணி எழுதப்பட்ட காலத்திலேயே ஆரம்பித்துவிட்டது. நம் சிந்தாமணியை ஆங்கிலபாஷா வித்துவானான டிரைடன் (Dryden) நூல்களுக்கு ஒப்பிடலாம். கம்பரைப்பிந்தியிருந்த போப் (Pope) புக்கு ஒப்பிடலாம். ஆங்கில பாஷை கீழ்த்தசை யடைந்த காலத்து இருந்த புலவர்களில் அவர்களிருவரும்தான் முக்கியஸ்தர்கள். அவர்கள் நூல்களும் நன்றாக இருக்கின்றன. ஆனால் அது நான் முன் சொன்னபடி ஒருமாதிரியான செயற்கையழகு உள்ளனவென்று தோற்றுகிறதேயன்றி வேறல்ல. போப் (Pope) கிரீஸ் தேசத்துப் பெரும்புலவனான ஹோமர் (Homer) எழுதிய இல்லியட் (Illiad)

என்னும் நூலை ஆங்கிலத்தில் எழுதினபடி கம்பரும் இராமாயணம் எழுதினர். இங்கிலாந்து தேசத்தில் சீக்கிரம் அவர்களைச் சூழ்ந்திருந்த பனி நீங்கிற்று. ஆனல் நம் நாட்டிலோவென்ருல் இன்னும் அந்தப் பனியைப் போக்கக்கூடிய சூரியனைக் காணேம். இப்போது புராணங்களையும், அந்தாதிகளையும், கோவை, உலாக்கலம்பகங்களையும், தவிர வேறு நூல்களை எழுதுவதைக் காணேம். ஒவ்வொரு தினுசிலும் ஒன்றிரண்டைப் படித்தால் மற்றவைகளைப் படிக்காமலே இன்னதுதான் இருக்குமென்று சொல்லிவிடலாம். இப்படியிருந்த நமக்கும், நம் பாஷைக்கும் இனிமேல் கொஞ்சம் நல்காலம் ஏற்படக்கூடுமோவென்று சந்தேகிக்கக் கூடியதாக இப்போது இருக்கிறது. வெகு சிறு வயதிலேயே தன் தொழிலை முற்றுவிடுத்துப்போன மகா-ள-ள-ஸ்ரீ சூரியநாராயண சாஸ்திரியாரும் அவர் மாணுக்கர்களும் மத்தியகால வழக்கத்தைவிட்டுப் பழையகால வழக்கம்போல இயற்கையாக நடக்கும் விஷயங்களைப்பார்த்து எழுத ஆரம்பித்தனர். ஆனல் இதுவரை அவர்களிலொருவரும் நிலையாக நிற்கக்கூடிய நூல் ஒன்றும் எழுதவில்லை. அவர்களைப் பின்பற்றி எல்லோருமே நம் மத்தியகால வழக்கங்களை விட்டுவிடுவோமானல் தான் நம் பாஷையும் முன்னுக்கு வரும். நாமும் முன்னுக்கு வருவோம். இப்போது அநேக இடங்

களில் பழந்தமிழ் நூல்களைப் படிக்கவும், அவைகளைப் பற்றி எழுதவும் ஆரம்பித்திருப்பது சீக்கிரத்தில் நாம் நம்மைச் சிறைப்படுத்தியிருந்த மயக்கத்திலிருந்து வெளிவந்துவிடலாமென்று ஒருவிதமான மனக்களிப்பைக் கொடுக்கிறது.

# தாய்மொழியே கல்விப்பயிற்சிக்கேற்ற முதற்றிறமான கருவி.

மெய்யான கல்விப்பயிற்சிக்குத் தாய்மொழியே ஆதாரம். தன் நாடு, நாட்டார் இவைகளின் நிலைமையை நன்கு ஆராய்ந்தறிந்து பொதுநன்மையை முக்கியமான ஜீவகாலமுயற்சியாகக்கொள்ளும்படி தூண்டத்தக்க நல்லறிவு விளையாவிடில், கல்விப்பயிற்சியுள்ளார் என்னும் பேருக்கு பாத்தியம் ஏற்படாது. தாய்மொழியே இத்தகைய பயிற்சியைத் தரவல்லது; மற்ற மொழிகளெல்லாம் தாய்மொழியின வலிமையையும் வளப்பத்தையும் பெருக்குவதற்கேற்ற துணைக்கருவியேயன்றி வேறன்று. தாய்மொழியின் மூலமகா பலவித மேல்நாட்டுக கலைக்ஞானங்களையும் நமதாக்கிக்கொள்ள முழுமனதோடு உழைத்தால் கற்றோரின் அறிவுமற்றோருக்கு எளிதில் பரவும்; தேசக்ஷேமத்திற்கு வேண்டிய பலவித காரியங்களையும் நம்மோடு சேர்ந்து கவனித்து அபிவிருத்திகளேற்படுத்த எண்ணிறந்த துணைவருண்டாகி நமது வேலையை எளிதாக்குவார்கள். பிறமொழிகளைக் காட்டிலும் தாய்மொழியே பலவிதங்களிலும் மெய்யான வலிமை அளிக்கும். அகத்தில் அன்பை வளரச்செய்து உணர்ச்

சியை உயர்ந்த பதவிக்குக் கொண்டுவருவதற்குத்
தாய்மொழிபோல் ஏற்ற சாதனம் வேறொன்றுமில்லை.
இதைப்பற்றி அமெரிக்கா ஐக்கியக்குடியரசு நாட்டுப்
பெருநகரமான நியூயார்க் பட்டணத்து நீதிபோதக
பாடசாலை உபாத்தியாயர் பெர்லிவல்சப் என்னும்
கல்விமானெழுதிய (Direct Method) டைரெக்ட்மெத்
தட் என்கிற போதனை முறைநூலில் இதுவிஷயமாக
விஸ்தாரமாகக் கூறப்பட்டுள்ளது. நமக்குள் முதற்
றிறமான சாமர்த்தியங்கள் எவையுண்டோ அவைக
ளெல்லாம் நாட்டார் மனதில் வேரூன்றி நல்ல பலன்
அளிப்பதற்கேற்ற முக்கிய சாதனம் தாய்மொழியே.
திறமை வளர்க்கும் சாதனங்கள் பலவுண்டு. கல்விக்
கழகங்கள், கலாசாலைகள், சமயநெறித்தாபனங்கள்,
கிராமப்பஞ்சாயத்துகள், சட்டநிருபண சபைகள்,
மகாஜனசபைகள், முதலிய இவைகளெல்லாம் நாட்
டின் ஜீவதாதுவை வளர்த்து புதிது புதிதான வாழ்வு
களை சிருஷ்டிக்கும் இன்றியமையாச் சாதனங்கள்.
இவைகளுக்கெல்லாம் உயிரளிப்பது தாய்மொழிக்கிள
ர்ச்சியே. Creative forces of the nation என்கிற நாட்
டின் சிருஷ்டி சக்திகள் வலிமைப்படுவதற்கு வாய்த்த
அரிய அமிர்தம் தாய்மொழியே. ஜனங்களுக்
குள்ளே பொது அபிப்பிராயத்தை உண்டுபண்ணினா
லன்றி எந்த முயற்சியிலாவது ஜயம் கிடைக்குமா? இங்
கிலீஷ், பிராஞ்சு முதலிய பாஷைகளில் இயற்றப்
பட்ட science என்கிற நவீனசாஸ்திரநூல்கள் அந்
நாடுகளின் வித்தியார்த்திகளுக்கே உரியவையல்லாமல்

நமது நாட்டுக்கு ஏற்றவைகள் ஆகா. விஷயங்களை நேரில் உற்றுநோக்கி தத்துவ பரீட்சைகள் பார்த்து சாஸ்திர உண்மைகளை ஊகித்தறிந்து உள்ளத்திலுள்ள கல்விக்கருவூலத்தை ஒழுங்குபட நிறைப்பதற்கு தாய்ப்பாலோடு நமக்கு ஊட்டப்பட்ட மொழியினாலல்லாது வேறெதினால் சாத்தியமாகும்? ஐரோப்பாவில் கீழ்வகுப்புகளிலேயே போதிக்கப்படுகிற நூற்றொகை விளக்கமாகிய Paulbert's first year of scientific knowledge, Pouchet's Universe முதலிய சாஸ்திர நூல்கள் இந்து உயர்தரப் பாடசாலைக்குப் பிள்ளைகள் வந்த பிறகுதான் சாத்தியமாகிறது. இவ்வகை நவீன தத்துவபோதத்தை கீழ்வகுப்புகளிலிருந்து பஞ்சிட்டுப்பாரமேற்றினாற்போலும், வாழைப்பழத்தில் ஊசி ஏற்றினாற்போலவும் படிப்படியாய்ச் சிறுகச்சிறுக ஊட்டி வந்து மேல்வகுப்புகளிலும் பாடசாலை முடிவுப் பரீட்சை (school final examination) பூர்த்தியாகுமளவுக்கு தமிழிலேயே தத்துவபோதனை செய்து தமிழிலே போதிக்கும் ஆசிரியரும், வழிகாட்டும் நூல்களும் கிடைத்து, பரிட்சைக் காகிதங்களில் எழுதுவதும் தமிழ்ப்பாஷையில்தான் இருக்கவேண்டுமென்று ஏற்பாடுசெய்யின், நமது நாட்டிலும் நவீன அறிவில் பலர் மெய்யான தேர்ச்சிபெற்று புதுவிஷயங்களைக் கண்டுபிடிக்க வல்லவராவார்கள். ராவ்பகதூர் கிடாம்பி அரங்காசாரியாரவர்களைப்போலவும், நூற்றொகைவிளக்கம் எழுதிய அநந்தசயனம் ஸ்ரீமான் சுந்தரம்பிள்ளையவர்களைப்போலவும், இரசாயன நூலெ

முதிய மாசிலாமணிப்பிள்ளை யவர்களைப்போலவும் அருமருந்துபோல சிலர்மட்டும் கிடைத்துவருவதற் குப்பதிலாக நாடெங்கும் தத்துவ ஆராய்ச்சிக்காரர் (scientists) மல்க, ஜீவனத்திற்குரிய நூதனத் தொழில் முயற்சிகளெல்லாம் வலுக்கும். தத்துவ நூலாராய்ச்சி, சரித்திர ஆராய்ச்சி செல்வநூலாராய்ச்சி முதலிய பலவித உயர்ச்சி தரும் கல்விகளெல்லாம் நாட்டிற்கு உரியனவாகும். இங்கிலீஷ் அல்லாத மற் றக் கல்விகளெல்லாம் தாய்மொழியிலேயே பாடசாலை முடிவுப்பரீட்சை (school final exmination) முடியு மட்டும் பயிற்றப்பட்டு மேற்கூறிய பரிட்சைக் கடிதங் களும் சுயபாஷையிலேயே வரையப்படவேண்டு மென்று துரைத்தனத்தார் கண்டிப்பாய் ஆக்ஞை செய்யும் வண்ணம் நாம் நமது நாட்டுத்தலைவர்கள் மூலமாக உலையாமுயற்சி களைகளை ஏகாக்கிரசித்தத் துடன் வேலை செய்வோமாக.

இந்த யோசனைக்கு, சில நண்பர்கள், "ஐயா தாங்கள் சொல்லுவதெல்லாம் மெத்த நன்றே; தமிழ்ப் பாஷையில் ஒழுங்கான சரித்திர நூல்களும் சாத்திர நூல்களும் இனிமேல்தானே உண்டாக வேண்டும்; தமிழில் தத்துவசாஸ்திரம், சரித்தி ரம், பூகோளம் முதலியவற்றைச் சொல்லிவைக்கத் தக்க போதகாசிரியர்களும் இல்லையே" என்று ஆட் சேபனை உண்டாக்கலாம். இதற்கு விடை எளிது; அதிலும் எளிதாக அநுபோகத்துக்குக் கொண்டுவர லாம். எங்ஙனமெனில், துரைத்தனத்தார் பள்ளிக்

கூடம் கலாசாலை இவைகளின் அதிகாரிகளைப் பார்த்து: "உங்கள் மாணுக்கர்கள் கற்கும் இங்கிலீஷ் முதலியன ஒழிய சகல நவீன அறிவும் தாய்மொழிப் பரீட்சைப் பத்திரங்களினலேயே சோதித்தறியப் படும்; அதற்குத் தயாராகவேண்டியது; ஒவ்வொரு பாடசாலை உபாத்தியாயர்களும் சுதேசபாஷா சங்கங்களாக ஒன்றுசேர்ந்து நவீன அறிவை நாட்டிற்கு உரியதாக்கும் நூல்களை எழுதுங்கள்; பொருளுதவி செய்வோம்'' என்று உத்திரவுசெய்தால் அப்போது போதகாசிரியரும் புத்தகங்களும் விரைவிற் கிடைப்பார்கள். ஜனங்களும் சிரத்தையாய் துரைத்தனத்தாருடன் சேர்ந்து உழைக்கவேண்டும். இப்போது நுனிப்புல் மேய்ந்து சாத்திர (science) உட்கருத்துகளை நன்கு அறியாமல் கணுக்கண்டதுபோல சில விஷயங்களை மாத்திரம் மேலெழுந்தவாரியாய் உட்கொண்டு இங்கிலீஷ் புஸ்தகங்களை பொட்டை நெட்டுருப்பண்ணி பரிட்சைக்கு உமிழ்ந்து பிறகு படித்ததெல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறந்துபோய் ஐரோப்பிய மாணவருக்கு இணையாகும் விருப்பமின்றி நாள்கழிக்கும் வித்தியார்த்திகள், அப்போது சமர்த்தும் திருத்தமுமான ஞானத்தை அடைவார்கள். கற்கிற கல்வி ஐயந்திரிபற நன்கு உணரப்பட்டு வேறுன்றி நாட்டிற்கு உரியதாகும்.

இங்கிலீஷ் சுயபாஷை அன்றாகையாலும், மாணவர் மூளைவலிமை, எல்லைவரையறுக்கப்பட்டதாகையாலும், ஏககாலத்தில்இரண்டுசிரமங்களைமாணுக்கர்

களுக்குத் தருதல் போதனுமுறைக்கும் பகுத்தறிவிற்கும் விருத்தமானது. அறிவுள்ள போதகாசிரியர்கள், மாணவர்கள் ஜீவசக்தியை வடிக்கட்டும் இப்போது அநுஷ்டானத்தில் இருக்கும் போதனுமுறையை அடியோடே மாற்றி, தாய்பாஷையிலேயே நவீன அறிவு நூல்களையும், உபாத்தியாயர்களையும் எளிதிற்கிடைக்கும்படி வேண்டிய பிரயத்தனங்களைச் செய்யவேண்டும். "இங்கிலீஷ் அல்லாதன, சுயபாஷையில் போதிக்கத்தக்கன" என்கிற துரைத்தனத்தார் ஆக்ஞையை ஏட்டு விதியாக மாத்திரம் வையாமல் நாட்டுவிதியாக்கல்வேண்டும். "எவன் வாசித்த நூலின் உண்மையான பொருளை அறியமுயலாமல் நெட்டுருப் பேர்வழியாய் இருக்கிறானோ அவன் சுமை தாங்கும் தூணிலும் இழிந்தவன்" என்கின்றமேதோர் வடமொழிச்செய்யுளுக்கு இலக்காகாமல்முயல்வோமாக. "இங்கிலீஷ், பிராஞ்சு முதலிய நமது நாட்டில் வழங்கும் ராஜபாஷைகளையே சுவீகரித்துக்கொண்டு, நமது மொழிபோல் கையாண்டு நூதன அறிவுக் கருத்துகளை அவைகளின் மூலமாயே மனதிற்செறித்து வளர்க்கக்கூடாதா?" எனின், "சாத்தியமில்லை; வேற்று மொழியில் அறிவுசேர்க்கும் முயற்சியால் நமது நாட்டுச் சிறுவர்களுக்கு ஜீவசக்தி குறைந்து திண்மையற்ற தீனர்களாகின்றனர்; originality என்கிற சுயக்கிரியா சக்தி வளராது இடர்ப்படுகின்றது; சுவற்றை வைத்துக்கொண்டல்லவோ சித்திரம் எழுதவேண்டும்; இதுவரையில்செய்த முறைத்தவறு போதும், நாட்டில்

நல்லறிவு வேரூன்றும்பொருட்டும் நாட்டுச் சிறுவர் திடகாத்திர தீர்க்க ஜீவிகளாகும்பொருட்டும், தாய் மொழியின் மூலமாகவே அறிவு புகட்டுதல் அறிவும் நெறியும் ஆகும்'' என்று விடை பகருவோம். கம்மீனியஸ் என்னும் வித்துவான் கருத்தும், நமது நாட்டிற்கு ஞானதீபம்போல் விளங்கும் ஜகதீஸ் சந்தர் போஸ் என்னும் பங்காலி தத்துவ சாஸ்திரியாரின் கருத்தும், நமது கொள்கைக்கு ஆதாரமாக இருப்பதைக் கண்டுகொள்ளலாம்.

நாட்டை ஒற்றுமைப்படுத்த தாய்மொழியிலும் மேலான சாதனம் வேறில்லை; ''ஒரே மொழியை பேசுகிறவர்களுக்குள்ளே ஒரே தாயின் பாலை உண்டவர்களுக்குள்ள அன்பு அமைந்திருக்கிறது'' என்று புரொபெஸ்ஸர் மாக்ஸ்மல்லர் கூறுவதையும் காண்க.

ஆகவே, மனத்தூய்மை, மேன்மை, அறிவு விசாலம், நாட்டாருக்குள் ஒற்றுமை, இவற்றிற்கெல்லாம் சுயபாஷையே ஜீவாதாரமாகையால், தாய்மொழி அறிவுபுகட்டற்கும் அறிவுவளர்ச்சிக்கும் முதற்சிறமான கருவி என்போம்.

ஒன்றுசேர்ந்து உழைத்து காருண்ய துரைத்தனத்தார் உதவியால் சித்திபெறுவோமாக.

உ

திருச்சிற்றம்பலம்.

## சங்கநூற்பயிற்சி.

"நீல மேனி வாலிழை பாகத்
தொருவ னிருதாள் நிழற்கீழ்
மூவகை யுலகமும் முகிழ்த்தன முறையே"

ஐங்குறுநூறு.

கனந்தங்கிய அக்கிராசனாதிபதியவர்களே!
ஆன்றோர்களே!

இந்நாள், நாம் எல்லேமுங்கூடி நம் தமிழ்த் தாயின் அபிவிருத்தியைக் குறித்து நந்தம் கடமைகளைச் செய்ய முன்வந்திருக்கும் நன்னாளாம். இத்தகைய சம்பவங்கள் அடிக்கடி நிகழப்பெறுவது மனித சமூகத்தின் முன்னேற்றத்திற்கு ஓரறிகுறியேயாகும். நம் வாழ்நாட்களுக்குள் இத்தகைய சுதினம் வாய்ப்பதும், திரிகரண பூர்வமாக அதைக் கொண்டாடக் கிடைப்பதும் நமக்கு ஓரரும்பெறற் பேறேயாம். இப்படி யருமையாய்க்கிடைத்த இக்காலத்தில், நுணுகிய ஆராய்ச்சியும், நீண்ட அநுபவமும் உடைய தம்ம

ஞேரின் அரிய பிரசங்கங்களைக் கேட்டு, அதன் வழி யொழுகவிருக்கும் தகுதியினைஞகிய யான், ஏதோ குழற முன்வந்தது நண்பர்களின் வேண்டுகோளை மறுக்கமாட்டாமையேயன்றி, வேறு எவ்விதத்தானும் அன்று. 'குற்றங்களைந்து குறைபெய்து மேற்கொள் ளல், கற்றறிந்த மாந்தர் கடன்' என்னும் களங்கமற்ற எண்ணமே இச்சபையில் என்னுளை யசைப்பிக் கின்றது.

இன்று நான் எடுத்துக்கொண்டிருக்கும் உபந்நி யாசத்திற்கு முன்னுரையாகத்தமிழின் பழைமையைப் பற்றிச் சிறிது கூறிவிட்டுப் பின்னர்ச் சங்கநூற்கள், அவற்றின் பயிற்சி, அவற்றில் அறியவிருக்கும் விஷயங் கள், பயன் என அதை நான்காக வகுத்துக்கொண்டு ஆரம்பிக்கின்றேன்.

க. தமிழின் பழைமை

பேஞட்டிற் பிரதம கவிராயராகப் பேர்பெற்ற 'ஹோமர்' Homer) என்பவர் 'இல்லியட்' (Illiad) என்ற கீதத்தை எழுதுவதற்கும், நம் பாரதவர்ஷத் தில் ஸ்ரீமத் வான்மீகிமுனிவர் ஆதிகாவியமாக இரா மாயணத்தை எழுதுவதற்கும் வெகுகாலத்துக்கு முன்பேயே, தமிழகத்துப் புலவர் பெருமக்களால் நுண்ணிய நூல் பல உயர்ந்த கருத்துக்களோடு எழு தப்பட்டன. இன்னும் தமிழின் பழைமை, பெருமை களைப்பற்றி ஆராயப்புகின், பின்வரும் ஆதாரங்கள் அகப்படுகின்றன.

I. மக்கள் முதற்கண் ஒலிக்கக்கூடிய இயல் ஒலிகளே தமிழ்ப்பாஷையிலிருக்கின்றன. (சப்த தத்துவ நூலுடையார் கூறுவது.)

II. உலகத்தில் வடமொழி பரவுதற்குமுன், ஆசியாக்கண்டத்திலும், ஐரோப்பாக்கண்டத்திலும் தமிழ் மூலபாஷையாக இருந்தது. *(இது பல பாஷைகளையுங்கற்ற ஆங்கில பண்டிதர்களாலும் ஒத்துக் கொள்ளப்படுகின்றது.)

III. விந்தியமலைக்கும் இமயமலைக்கும் மத்தியப் பிரதேசம் ஆரிய நாகரீகம் அடைவதற்கு வெகுகாலத்துக்கு முனபேயே தமிழகம் நல்ல நாகரீகமடைந்திருந்தது. (நவீன சரித்திராசிரியர் கூற்று.)

IV. நமது புறப்பொருளிலக்கணத்துக் கூறப்படும் துறைகளாகிய தமிழ் வீரர் பூச்சூடும் வழக்கத்தை வால்மீகி பகவான் இராமாயணத்திற் கூறுகின்றார்.

இவற்றால், தமிழ் இன்னகாலத்தில் உண்டானதென்றறியப்படாத பழைமையுடையது (அநாதியானது) என்பதும், உலகத்தின் பலபாகங்களிலுஞ் பரவியிருந்ததென்பதும் விளங்கும்.

உ. சங்க நூற்கள்.

இத்தகைய நம் தமிழ் அக்காலத்திலேயே இலக்கண இலக்கியங்களால் சம்பூர்ணமடைந்திருந்தது மன்றித் தலை, இடை, கடை யென்னு முச்சங்

* மனோன்மணீயம், அநுபந்தம்.

கங்களானும் ஆராயப்பட்டும் வந்தது. இம்முச்சங்க நூற்களும் முறையே, தலையாய ஓத்து, இடையாய ஓத்து, கடையாய ஓத்து என்னப்படும். இந்நூற்களுள், தலைச்சங்க நூற்களெங்கோ சிலபாக்களொழிய ஏனையவும், இடைச்சங்க நூற்களிரண்டொன்றொழிய ஏனையவும், கடைச் சங்க நூற்கள் சிலவும் இருந்த இடமும் தெரியாமல் இப்போது அழிந்து விட்டன. எஞ்சியுள்ள இலக்கண இலக்கியங்களாகிய சங்கநூற்களின் பயிற்சியையே இங்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. அவை, தொல்காப்பியம், இறையனாகப்பொருள் ஆகிய இலக்கணங்களும், ஐம்பெருங்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு, ஆகிய இலக்கியங்களுமாம்.

௩. பயிற்சி.

இந்நூற்களின் பயிற்சி காலக்கிரமத்தில் வரவரக்குறைந்துகொண்டே வந்துவிட்டது; அதற்குச் சொல்லப்படுங்காரணங்கள் பலவற்றுள் தமிழரின் சிரத்தையின்மையுமொன்று. நாகரீகம் தலையெடுத்து வருவதாய்ச் சொல்லப்படுமிக்காலத்திலுங்கூட நம்மவர் அவற்றிற்பயில்வதாய்க்காணப்படவில்லை. அவற்றின் பேரைக்கேட்டு வியப்பும், நகைப்புங் கொள்ளக் கூடியவர்களாக நம்மவர்களை யின்றும் பத்தாயிரக் கணக்கில் காணலாம். அவர்களிற்பலர், தலையணை மந்திரோபதேசம், தேவலோகம் கிரிமினல்கேஸ், போன்ற நவீனகங்களைப் படித்துக்கொண்டு அவற்

ஞேடு நின்றுவிடுகின்றனர்; வேறுசிலர் விருத்தப் பாக்களாலான பிற்காலத்து நூல்களாகிய, பாரதம், நைடதம் ஆகிய இவற்ேறாடு படிப்பை நிறுத்திக் கொள்கின்றனர், ஆங்கிலங் கற்றவர்களாகிய மற்றுஞ்சிலர் ஷேக்ஸ்பியர், ஜான்மில்டன் இவர்களின் நூல்களின்மேலேயே மூழ்கி யாழ்ந்து விடுகின்றனர். இவர்கள் யாவரும் இவற்ேறாடு சங்கநூற்களையும் பயில்வார்களானல், எதில் அதிக சுவையென்று உண்மையையறிந்து கொள்வார்கள்; 'பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிற் சொல்லப்படும் நீதிகள் எப்பாஷையிலும் இல்லை' என்றும், 'வேதம் வேதாங்கம் முதலிய சமஸ்த சாஸ்திரங்களையும் பிழிந்தெடுத்தால் என்ன நிற்குமோ அது (சாரம்) தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் மீறுது' எனவும் பல்லான்று கேள்விப்பயனுணர்வர் கூறுகின்றனர். நமது முன்னோர், நமக்கென்று தேடி யெடுத்துச் சேமித்து வைத்திருக்கும் விவேக பொக்கிஷங்களாகிய அவற்றை நாடாமலிருப்பது தமிழர்க்கு ஒரு பெருங்குறையே. தமிழ் கற்றவரிலும், ஆங்கிலங் கற்றவரிலும் எங்கேயோ ஒரு சிலர்மட்டும் அவற்றின் சுவையறிவாராய் நிற்க, ஏனையோர் அவற்றிற்கு அந்நியராயே நிற்கின்றனர். அவற்றில் மிகவும் சிறந்த அரும்பெரும் பொருள்கள் செறிந்துள்ளனவென்பதை அவர்களுணர்வாராயின் அங்ஙனம் செய்யாரன்ேறா? ஆதலின் அவற்றிற் கூறப்பெறும் விஷயங்கள் இத்தகையவென்று சிறிது கூறுகின்றேன்.

ச. அந்நூற்களிலறியவிருக்கும் விஷயங்கள்.

நமது பூர்வ சரித்திரங்கள், அக்காலத்துத் தமிழர் அறிந்திருந்தகலைகள், அவர்களின் மனோ பாவம், பழக்க வழக்கங்கள் முதலிய பலவும் அந்நூற் களிலிருந்து நாம் அறிந்துகொள்ளவிருக்கும் விஷ யங்களாம்.

(1) சரித்திரங்கள்.

நம் நாட்டின் பூர்வசரித்திரங்களை யுண்மையாய் அறிதலுறுவார்க்கு நம் சங்க நூற்களே தக்க சாத னங்களாம். சரித்திர மெழுதுவோர் கவனிக்கத் தக்க எத்தனையோ விஷயங்கள் அந்நூற்களிலிருக் கின்றன.

"கற்றோன்றி மண்டோன்றாக்காலத்தே வாளோடு முற்றோன்றி மூத்தகுடி." என்னும் புறப்பொருள் வெண்பாமாலைச் செய்யுள் (கூ௫) ஜனங்கள் காடு திருத்தி நாடாக்கிக் கொள்வதன்முன் மலைப்பிர தேசங்களில் வசித்தாரென்பதையும்,

"தென்குமரி வடபெருங்கல், குணகுட கடலாவெல்லை யினிதுருண்ட சுடர்நேமி."

என்னும் புறப்பாட்டு (௰எ) தமிழரசரின் இராஜ்யம் ஒரு காலத்தில் இமயமலைவரை பரவியிருந்ததென்ப தையும், தெரிவிக்கிறது. இன்னும், பழைய சிலாசாச னங்களோடும், அக்காலத்து இங்கு வந்து சென்ற அந்நிய நாட்டாரின் குறிப்பு (Diary) களோடும் ஒத்திட்டு மகிழத்தக்க பலவிஷயங்களும் அங்குக் காணலாம். நமது சரித்திரங்களும், சங்கநூற்களும்

இவ்வாறிருப்ப அந்நூற்களைச் சிறிதும் ஆராயாமல் பலரும் பலவாறு தேசசரித்திரம் எழுதியிருப்பது, எவ்வாற்றானும் பொருந்தாததேயாம்.

## II. தமிழர் அறிந்திருந்த கலைகள்.

பண்டைக்காலத்தமிழர் அறிவனூற் பொருளிலும் உலகநூற் பொருளிலும் நிரம்பத் தேர்ச்சி பெற்றிருந்தனர். அவை வெறும்படிப்பு மாத்திரமாயிராமல் அநுபவ மூலமாயும் அறியப்பட்டிருந்தன. இவ்வியாசத்தின் றலைப்பிற் காட்டப்பெற்றிருக்கும் ஐங்குறுநூற்றுச்செய்யுளே, அவர்களறிந்திருந்த அறிவனூற் பொருளுக்குச் சான்றுபகரும். அதில் "ஒருவனிருதாள் நிழற்கீழ் மூவகையுலகமும் முகிழ்த்தன முறையே" என்பது சூரியன் உதயமெற்பமைடய அவன் சந்நிதானத்தில் விரிவன விரிந்தும், குவிவன குவிந்தும் எதிர்வன எதிர்ந்தும், உதிர்வன உதிர்ந்தும், வளர்வன வளர்ந்தும், தளர்வன தளர்ந்தும், விளைவன விளைந்தும், உளைவன உளைந்தும், எவ்வாறு ஆகின்றனவோ அவ்வாறே இறைவன் சந்நிதானத்திற் பஞ்சகிருத்தியங்களும் தந்தம் பாட்டில் ஒழுங்குடன் நடைபெறுகின்றன, என்பதைக் காட்டுகின்றது. இன்னும் இச்செய்யுள் சைவசித்தாந்த நுட்பங்களுக்குறையுளாயிருப்பதையும் அறிக. (மூன்றடிக்குள் எத்தனை விஷயம் அடக்கப்பட்டனவென்பதும் அறிந்து மகிழத்தக்கது.)

இனித்தமிழர் உலக நூற்றுறைகளெவ்வொன்றிலும், அதிக பயிற்சியடைந்திருந்தனபக்குச் சங்க

இலக்கியங்களில் ஆங்காங்குக் காணப்படும் விஷயங்களே தக்கசான்றாம். அவர்கள் தாவரநூல் (Botany) நன்கு அறிந்திருந்தமையைக் குறிஞ்சிப்பாட்டும், மரமியற் சூத்திரங்களும் வலியுறுத்தும். இவ்வாறே உடற்கூற்று நூல் (Physiology) பிராணிவர்க்க நூல் (Zoology) முதலிய பலவித நூல்களின் பயிற்சிக்கும் பலஉதாரணங்கள் அகப்படுகின்றன. அன்றியும் அவ்வத்துறைக்குரிய நூல்களும் அக்காலத்திருந்தனவெனபதற்குப் பின்வருஞ் செய்யுளே சான்றாம்.

“ எரணம், உருவம், யோகம், இசை, கணக்கு, இரதம், சாலம்,
தாரணம், மறமே, சந்தம், தம்பம், நீர், நிலம், உலோகம்,
மாரணம், பொருள், என்றின்ன மானநூல் யாவும்வாரி
வாரணம்கொண்டதன்றே வழிவழிப் பெயருமாள ”

பழஞ்செய்யுள்.

இதில் கூறும் பொருள் நூல் (Economics) இருபத்தொரு வகைப்படுமென்று புறநானூற்றுரையாசிரியர் கூறுகின்றனர். இன்னும், தருக்கநூல் (Logic) தமிழில் இருந்ததென்பது மணிமேகலையானுணரப்படும்.

கைத்தொழிலில், கப்பல் செய்தல் முதற்கொண்டு துன்னகாரர் தொழிலிறுதியாக எல்லாத்தொழிற்களிலும் போதிய தேர்ச்சிபெற்றிருந்தனர் என்பது சங்க இலக்கியங்களால் நன்கு அறியலாம். அன்றியும்,

“உழவு, தொழிலே, வரைவு, வாணியம்,
வித்தை, சிற்பம், என்றித்திறத்தறநூல்
கற்கு நடையாது கருமபூமி” எனவும்,

"கல்லும், உலோகமும், செங்கல்லும், மரமும்
மண்ணும், சுதையும், தந்தமும், வண்ணமும்
கண்ட சருக்கரையும், மெழுகு மென்றிவை
பத்தே சிற்பத் தொழிற்குறுப் பாவன." எனவும்
கூறும் திவாகரத்தையும் நோக்குங்கள்.

ஜாவா முதலிய தீவோடும், கிரேக்கு முதலிய அந்நியதேசத்தோடும் தமிழர் வியாபாரம் செய்திருந்தமை, சங்க நூற்களில் முழங்குகின்றன. "கண்ணெழுத்துப்படுத்த எண்ணுப்பலபொதி" என்னும் சிலப்பதிகாரத்தால் விலாச அடையாள எழுத்துக்கள் எழுதப்படுவதையும்,

"சிறுதோட் கோத்த செவ்வரிப் பறையின்
கண்ணகத் தெழுதிய குறியே போல" என்னும்
தொல்காப்பிய உதாரணச் செய்யுளால் வியாபார அடையாளம் (Trade Mark) இடும் வழக்கம் அறிந்திருந்தமையையும் உணரலாம்.

உழவர்களின் வேளாண்மைத் திறத்தினையும், அவர்கள் காலத்தை யுபயோகித்துக்கொண்டமையையும் அறியப் பின்வரும் செய்யுளொன்றேபோதும்:—

"அரிநர், கீழ்மடைக்கொண்ட வாளையும் உழுநர்
படைமிளிர்ந்திட்ட யாமையும் அறைநர்,
கரும்பிற் கொண்டதேனும் பெருந்துறை
நீர்தருமகளிர் குற்ற குவளையும்

வன்புலக் கேளிர்க்கு வருவிருந் தயரும்
மென்புல வைப்பி னன்னாட் டுப்பொருந."

என்பது புறநானூறு. இன்னும் போர்த்திறம், சுககந் தர்சனகலை, அரசியல், அமைச்சியல் முதலிய பல கலைகளிலும் உன்னத நாகரீகம் வாய்ந்திருந்தமை ஆங்குக் காணலாம்.

## III. தமிழரின் மனோதர்மம்.

அவர்களின் மனோதர்மம் இப்படியிருந்ததென்பதற்கு சில உதாரணங்கள் காட்டுகின்றேன். நாயக நாயகியரில் ஒருவர் மற்றொருவரிடத்து வைக்கவேண்டிய அந்நியோந்நிய விசுவாசத்தைப் பின்வரும் இரு செய்யுட்களால் அறியலாம்.

"காணு மரபிற் றுயிரென மொழிவோர்
நாணிலர் மன்ற பொய்ம்மொழிந் தனரே
யாஅங்கண் டிம்மே யரும்பெற லுயிரே
சொல்லு மாடும்மென் மெல இயலும்
கணைக்கால் நுணுகிய நுசுப்பின்
மழைக்கண் மாதர் பணைப்பெருந் தோட்டே"

என்னும் தொல்காப்பியப் பொருளதிகார உதாரணச் செய்யுள் ஆடவர் மனைவியர் மேல் வைத்த காதலைத் தெரிவிக்கிறது. (இதன் பொருள்—உயிர் அருவப் பொருளென்று சொல்வோர் சற்றும் கூசாமல் பொய்யையேசொல்லிவிட்டனர்! இதோ! நான், என்னருமை

யான உயிரைப் பார்க்கின்றேன்; அது பேச்சும் பேசுகிறது; மெல்லமெல்ல நடக்கிறது; கணைக்காலையும், சிற்றிடையையும், குளிர்ந்த கண்களையும் அழகிய பருத்த தோள்களையும் உடையதாயிருக்கிறது என்பது—இது ஆயத்துச் செல்கின்றாளைக் கண்டுகூறியது.)

"அன்னாய் வாழிவேண் டன்னைநம் படப்பைத்
தேன்மயங்கு பாலினு மினிய அவர்நாட்
டுவலைக் கூவற் கீழ
மானுண் டெஞ்சிய கலுழி நீரே"

(ஐங்குறுநூறு உ0௩)

என்னுமிச்செய்யுள் மனைவியர் தம் கொழுநரிடத்து வைத்த பற்றை விளக்குகின்றது. (இதன் பொருள்: தோழியே! அவர் நாட்டில், உதிர் சருகுகளால் மூடிய அடிக்கிணற்றிலுள்ள மிருகங்கள் குடித்து எஞ்சிய கலங்கல் தண்ணீர், நம் தோட்டத்துத் தேனோடு கலந்த பாலினுமினியதாயிருந்தது என்பது-இது தோழிக்குத் தலைவி கூறியது.)

இவ்விரண்டினாலும் தம்பதிகள் அந்நியோந்நிய விசுவாசத்துடன் இருக்கவேண்டிய முறைமை தெரிகிறோம். இத்தகையினர் கூடி இல்லறம் நடத்துவாரேல் அது, 'துறவறத்தினும் சிறந்தது,' என்பது புதுமையாகுமா?

"நாளென வொன்று போற் காட்டி யுயிரீரும்
வாள தணர்வார்ப் பெறின்" (திருக்குறள் ௩௩௪)

இதனால் பொழுது கழிதலை எவ்வாறு எண்ணினார்கள் என்பது போதரும்.

"கோடியர் நீர்மை போல முறைமுறை
யாடுநர் கழியு மிவ்வுலகத்து" (புறம் உக)

எனவரும் செய்யுளால் இந்த உலகத்தை ஓர் நாடகசாலையாக எண்ணினர் என்பதும்,

"இம்மைச் செய்தவை மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்" (புறம் கஙச)

இதனால் கர்மங்கள் நிஷ்காமியமாகச் செய்யவேண்டும் என்னும் கீதா தாற்பரியத்தை எத்தனை வருஷங்களுக்கு முன்பேயே அறிந்திருந்தனர் என்பதும் புலப்படும்.

ஒவ்வொருவரும் தாம் செய்யவேண்டிய ஒவ்வொரு தொழிலையும் தத்தம் கடமை என்று பாவித்ததை

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவா ளருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

(புறம் ருஉ)

என்னும் செய்யுளால் அறிகிறோம். இவ்வாறே ஒவ்வொரு மனிதனும், ஜாதியாரும் தத்தம் கடைமைகளைச் சரிவரச்செய்வரேல் ஒரு நாடு அதிசீக்கிரத்தில் முன்னுக்கு வருமென்றற்கு என்ன தடை?

ஜனங்களுக்குள் ஐக்கியம் வேண்டுமென்பதை அவர்கள் எவ்வளவு அழுத்தமாய் அறிந்திருந்தார்கள் எனற்கு இச்செய்யுள் சான்று பகரும்,—

"ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே
இருவீர் வேற லியற்கையு மன்றே

* * * *

நும்மோ ரன்ன வேந்தற்கு
மெய்ம்மலி யுவகை செய்யுமிவ் விகலே" (புறம் சுரு)

இனி,

"திங்களைப் போற்றுதூஉம் திங்களைப் போற்றுதூஉம்
கொங்கலர் தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்க ணுலகளித்த லான்."

என்னும் சிலப்பதிகாரத்தால் அவர்கள் அரசனைத் தெய்வத்தினுமதிகமாக மதித்திருந்தமை பெறப்படுகின்றது. இவ்வாறே உயர்ந்த பொருள்களும் ஆழ்ந்த கருத்துகளுமுடைய செய்யுட்கள் பலவும் அவர்களின் மனோநிலைமையைக் காட்டும் கண்ணாடிகளாக நின்று நிலாவுகின்றன.

## IV. நம்முன்னோரின் பழக்க வழக்கங்கள்.

பழைய காலத்து வழக்கங்களுள் பாராட்டத் தக்கன பல. அவற்றுள்,

“செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவைதூங்க”

(திருமுருகாற்றுப்படை)

என்பதினால், பகைவர்களைப் பெண்களாக மதித்து, அதற்கறிகுறியாகக் கொடிகளினருகில் பதுமைகளையும் பந்துகளையும் தொங்கவிடுவரென்பதும்.

“வன் சொலிளைஞர் கவலை காப்ப”

(மதுரைக்காஞ்சி)

என்பதனால், வழிப்போக்கருக்குத் தீங்குறாதபடிக்கும் மயங்குவார்க்கு வழி காட்டுதற்கும் பலவழிகள் சந்திக்குமிடங்களில், அரசரால் நியமிக்கப்பட்ட காவலர் காத்துக்கொண்டிருப்பது வழக்கமென்பதும் தெரிகின்றது. இவ்வாறே ஊகித்தறிவதற்குங்கூடாமல் மறைந்த வழக்கங்கள் பல. அன்றியும், பண்டை வழக்கங்களில், தற்கால வழக்கங்களோடு ஒத்திட்டுப் பார்த்து மகிழக்கூடியவும் பல: பதிற்றுப்பத்தில்

“செய்தன் மேவலமர்த்த சுற்றமொடு
மேயினருறையும் நாடு” என்னும் செய்யுளும்

‘தலைவர் செய்த காரியங்களைப் பின் சிதையாது, தாம் அவற்றையே மேவுதலையுடைய அத்தலைவரோடு

மனம் பொருந்தின சுற்றம்' என்னும் அதனுரையும் தற்போதுள்ள லெஜிஸ் லேடிவ் கௌன்சிலை ஞாபகப்படுத்தும். 'பின் சிதையாது' என வரும் உரை நமது வைசிராயாயிருந்த 'கர்ஸன்' பிரபுவின் செய்தியையும் உணர்த்தும்.*

"முழுவலிக் கூட்டுறைவயமாப் புலியொடுகுழும்" எனவும்,

" பேரிசை நன்னன் பெரும் பெயர் நன்னாள் " எனவும் வரும் மதுரைக் காஞ்சியால் முறையே அக்காலத்து மிருகக் காட்சிசாலை வைக்கப்பட்டிருந்ததெனவும், அரசன் பிறந்த நாட் கொண்டாட்டம் கொண்டாடும் வழக்க மிருந்த தெனவும் அறியலாம். இனி, பொருள்களின் இயற்கை வர்ணனைகளையே கூறுவது அக்காலத்துப் புலவர் பெருமக்களின் வழக்கமென்பது சங்க நூற் பயிற்சியுடையார் யாவர்க்கும் எளிதின் விளங்கும். சங்க நூற்களிற் கூறப்படுவனவெல்லாம் இயற்கையையே யாகலின், அவை கற்போர்க்கு நேரிற் கண்டாலன்ன காட்சியைப் பயந்து மெய்ப்பாடு விளைவிப்பனவாய் இருக்கின்றன. தன்மை நவிற்சியும், உவமும், பாவிகமும், ஆகிய அணிகளேயன்றித், தற்குறிப்பேற்றமும், உவகை

---

* அது பங்காளப்பிரிவினை;— அதுவே பின் சிதைக்கவேண்டிற்று; சுற்றத்தார் (ஜனங்கத்தார்) மனம் மேவும்படி நடக்கத் தலைவர் தெரிந்துகொள்ளாமையால்.

வரம் பிறக்கும் நிலைமைத்தாகிய அதிசயமும்போல் வன அங்குக் காணப்படா.

"மறிய, குளகுரையாத்த குறுங்காற் குரம்பை
செற்றை வாயிற் செறிகழிக் கதவின்
அதளோன் றுஞ்சுங் காப்பி னுதள
நெடுந்தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றில்
கொடுமுகத் துருவையொடு வெள்ளைசேக்கும்
இடுமுள் வேலி யெருப்படு வரைப்பு"

(பெரும்பாணாற்றுப்படை)

['ஆட்டுக்குட்டிகள் தின்னுதற்குரிய தழைகளைத் தன்னிடத்தே கட்டிய, குறிய [பந்தர்க்] கால்களையும், சிறு தூறுகளையுடைய வாயிலினையும், கழிகளாற் கட்டப்பட்ட கதவினையும், கிடாயின் தோல்களைப் பாயாகவுடைய கிழவன் தூங்கும் காவலையும் உடைய குரம்பையினையும், தாம்புகளைக் கட்டிய குறிய முளைகளையுடைய முற்றத்தினையும், உடைய ஊர்"] என இடைச்சேரியையும்,

"பாலொடு வந்து கூழொடு பெயரும்
யாடுடை யிடை மகன்"

(பொருளதிகார உதாரணம்)

என இடையனையும் வர்ணித்தமைகாண்க. ஆங்கில கவிகளும் இவ்வாறே இயற்கை வர்ணனையையே விரும்புவர்.

"ஒற்றையாழியங்கேதரவசை · · · மதில் கடக்கப்
பெற்றிலாமையிற் பிறங்கு பொற்கதவங்கள் திறக்கும்
அற்ற நோக்குவன் அங்கை · ரியல்புற வணியக்
கற்றை வெண்மதி சாளரத்தாடியிற் காட்டும்"

என்பதும்போல்வன வடமொழிக் கலப்பு வந்தபின் தோன்றியவையாம். இதனல் ஆதியில் தமிழர் இயற்கை வர்ணனைகளையே விரும்பினர் என்பதும், பிற்காலத்தே வடமொழியாளரைப்போலத் தாங்களும் அதிசயோக்தியாதி கற்பனை சாரங்களில் அபிருசியுடையவராயினர் என்பதும் புலப்படும்.

இன்னும், தாம்காணும் ஒவ்வொரு பொருளையும் ஊன்றிப் பார்த்து ஆராயும் வழக்கம் அக்காலத் தெவ்வாறிருந்த தென்பதைப் பின் வருவன வலியுறுத்தும்.

"தேய்த லுண்மையும் பெருக லுண்மையும்
மாய்த லுண்மையும் பிறத்த லுண்மையும்
அறியாதோரையும் அறியக் காட்டித்
திங்கட் புத்தேள் திரிதரும் உலகத்து" (புறம் உள)

"முற்றுமஞ்சட் சிறுபுறம் கடுப்பச்
சுற்றிய பிணர்சூழ் கதிர் யிறவு"
(தொல். பொருள். உதாரணம்)

"கட்டளை யன்ன மணிநிறத் தும்பி" (ஐங்குறுநூறு)

இப்போதுபோல் நுனிப்புல் மேயும் வழக்கம் அக்காலத்திருந்ததில்லை யென்பதிவற்றல் அறியப்படுகின்றது.

௫. பயன்.

நண்பர்களே! இதுகாறுங் கூறிவந்தவாற்றால் நம் அமிழ்தினுமினிய தமிழின் பழைமைப் பெருமைகளும் பழந்தமிழரின் நாகரீகங்களும் ஒருவாறு தோன்றுகின்றனவன்றோ! ஆனால் இப்போது அதனைச் சொல்வதாற்பயனென்ன? என்று சிலர்க்கு ஆட்சேபம் தோன்றலாம். ஊன்றி நோக்கின் அவ்வித ஆட்சேபத்திற்கிடமில்லை.

உயர் குடியிற் பிறந்த ஒருவன் சாமானியனேயாயினும், அவன் முன்னோரின், ஒழுக்கம், வீரம், கீர்த்தி, முதலியவற்றை அடிக்கடி கேட்பிக்கப்படின் தன் நிலைமைக்கு நாணி முன்னோரநுசரித்த வழியைப் பின்பற்றித் தன் முன்னோரது நிலைமைக்கு வந்து விடுவானென்பது அநுபவ சித்தமன்றோ? "உரை முடிவு காட்டிய உரவோன் மருக" "உலகமாண்ட உயர்ந்தோர் மருக" என்று நம் சங்கநூற்களிற் கூறப்படுவதும் இக்கருத்துப்பற்றியேயாம். அதுபோல, நாம் சங்க நூற்களை ஆராயின் நமது பாஷை இத்தன்மையானது; நமது நாடு இது; நமது முன்னோர் அடைந்திருந்த உன்னத நிலையிது; அநுசரித்த வழிகளிவை; என்ற ஞாபகம் உண்டாகி, அறிவாலும் செல்வாக்காலும் சிறந்தவர்களாக உலகத்தாரால் மதிக்கப்பட்ட பெரியோர்களின் சந்ததியார்களாகிய நாம் தற்காலத்தில் பேதையர்களாகவும் ஏழையர்களாகவும் பிறரால் மதிக்கப்பட்டு நிற்பதற்குக் கார

ணம் என்? அவர்களுடம்பில் ஓடிக்கொண்டிருந்த இரத்தமல்லவா இன்னும் நம்முடம்பிலும் ஓடிக்கொண்டிருக்கின்றது. அவருடைய பாதம்பட்ட நிலத்திலேயன்றோ நாம் இருக்கின்றோம் என ஊக்கமுடையவர்களாகி அவர்களின் சந்ததியாரென்பது வீண் பெருமையாகாதபடி நாமிழந்த கலைகளை மீட்டும் பெறுவோமென எண்ணி முன்னுக்கு வருவோமென்பது, திண்ணம். அவை, தற்காலத்தில் பிறபாஷைகளிலிருந்தே நாம் பெறவேண்டியனவாயிருத்தலின் ஆங்கிலப் பயிற்சியும் தமிழபிமானமுமுள்ள சகோதரர்கள் நமக்கு அவற்றைக் கிடைப்பிப்பார்களாக! இவ்விதமாக நவீன கலைகளைக் கற்கத் தூண்டுவதாலும் நமது முன்னோர்கள் தேடிவைத்த ஞானக் களஞ்சியங்களாயிருத்தலாலும் தமிழர் ஒவ்வொருவரும் சங்க நூற் பயிற்சியுடையவராயிருக்க வேண்டியது ஆவசியகமே.

"பழந்தன மிழந்தன படைத்தவரையொத்தாள்" எனக் கவிச் சக்கரவர்த்தியார் கூறிய வானந்தத்தை யனுபவித்தறிவோமாக.

சா. முடிவுரை.

சங்க நூற்களை யாராய்ந்த புலவருள் ஒருவரும் பின் வேதத்தையருளிய வாயில் தமிழிலக்கண நூல் சொல்லியருளியவருமாகிய சிவபெருமான் நந்தமிழகத்தையும் தமிழ்ப் பாஷையையும் காப்பாற்றியருள்வாராக. சுபம் ! சுபம் ! ! சுபம்! ! !

கடவுள் துணை

# நமது பழைய புதுச்சரித்திரம்.

தமிழராகிய நமக்குப் பண்டுதொட்டுள்ளதும், இன்று வெளிவருவதுமான சரித்திரம் என்பது இவ்வியாசத்தின் பெயர்ப்பொருள். இவ்வியாசம் முகவுரை, வகுப்புரை, தொகுப்புரையென மூன்று பிரிவினையுடையதாகும்.

## முகவுரை.

நான் கும்பகோணம் காலேஜில் வாசித்தபோது ஸ்காட்ஸ் நாவல்கள் ஒன்றில் ஒரு சங்கதி யெழுதி யிருக்கக்கண்டேன். அச்சங்கதி அப்போது வெற்றுரையாகவே தோன்றியது; இப்போது யான் எழுதும் வியாசங்களுக்கு அஸ்திவாரக்கல்லாகியது. அது தான் யாதெனில் சொல்லுகிறேன் :—

பிரான்சு தேசத்தரசனாகிய 17-ம் லூயி என்பவர் பாரிஸ்நகரத்துக்கரசனாயிருந்தவனத்தில், வழக்கம் போலத் தனியே சுற்றித்திரிந்து கொண்டிருந்தார்; அங்கே எதிரில் ஒரு வாலிபன் வரக்கண்டார். அவனை யாரெனக்கேட்க, ''நான் ஒரு ஸ்காட்டிஷ்யுத்த வீரன், என்தேனும் ஒரு இராணுவத்தில் அமர்ந்திருக்க

மண்ணி இந்நாட்டிற்கு வந்தேன்" என்றான். இந்தே சத்தாசனுடைய இராணுவத்தில் அமர்ந்திருக்க இஷ்டமோ என்ன, 'சை! இதிலும் இழிவானதொன் றுண்டா? இவ்வரசன், ஆண்டன்மை சிறிதும் இல் லாதவன்; இவன் மாதம் ஒன்றுக்கு ஆயிரம் பொன் கொடுத்தாலும் பெரிதென்றெண்ணேன்; புருஷ சிம்மமாகிய பர்கண்டி பிரபுவினிடத்தில் ஒருகாசு கூடப்பெறாது வேலைசெய்ய இடம் பெறுவேனாகில், அதுவேயெனது பெரும்பாக்கியமாகும்" என்றான். அது கேட்ட அரசன் "ஏடா பையா! அரசனுடைய வனத்தி லேயே இருந்துகொண்டு, அவ்வரசனை இழித்தும் அவன் சிற்றரசனில ஒருவனை உயர்த்தியும் பேசுகிறாய்; இது உனக்கு ஆபத்தாய் முடியும்; இனி ஒருதரம் அப்படிச்சொல்லாதே; இதை யார் அரசனிடம் போய்ச்சொல்வாரென்றெண்ணாதே; இங்குள்ள மரத்தின் இலைகளுக்குங்கூட காதும், நாவும் உண்டு; அவைகள் நீ சொல்லிய அனைத்தையும் கேட்டு, அவற்றுள் ஒன் றேனும் விடாது அரசன் செவிக்கேறச்செய்யும்; ஆத லால் எச்சரிக்கை இருக்கட்டும்" என்றார். "இலை போய்ச்சொல்வதென்ன! நானே நேரில் சொல்லத் தயாராயிருக்கிறேன்" என்று பின்னுந் துணிவுடன் சொன்னான். இதில் "இலைபேசும்" என்ற சங்கதிதான் யான் மேலே குறிப்பிட்ட சங்கதி. "இலை பேசும்" என்றதை அப்போது அலட்சியம் பண்ணினேன், மிகையென்றும் எண்ணினேன். இப்போதோ, அவர்

சொன்னது போதாது; மரம் நிற்கும் மண்ணும், மண்ணுள் மறைந்துள்ள பொன் முதலியபிறவும் பேசும் என்று சொல்லியிருந்தால் மிக்க பொருத்தமாயிருக்கும் என்று எண்ணுகிறேன் ஏன் எனில், இமயமலையிலிருந்துவெட்டி யெடுக்கும் சில கற்கள் கடற்கிளிஞ்சில் முதலியவற்றோடு சம்பந்தப்பட்டிருப்பது கொண்டு அம்மலை ஒரு காலத்தில் கடலாயிருந்ததென்கிறோம். இந்துசமுத்திரத்தின் அடியிற் காணும் பாறைகள் சிலவற்றில்மரக்கொம்புமுதலியமூலவர்க்கம் உருமாறாது மட்கியிருக்கக்கண்டு, அக்கடல் ஒருகாலத்தில் திடலாயிருந்ததென்கிறோம். என்னைப்போல் மடிக்காமலும், கொம்பைப்போல் மட்காமலும் கறையானால் அரிக்கப்படாமலும் இருக்கும் பொன் முதலியவற்றைக்கொண்டு எத்தனை பெருங்காரியங்களை யறியலாகும்! மண்ணுள் மறைந்துள்ள பொன் முதலியன ஒருநாள் கறையானை விளித்து "எங்களை யரிக்க உன்னாலாகாது; இங்கிருந்து பயனில்லை உன் காரியம் பலிக்குமிடம் பார்த்துச்செல்" என்று சொல்லினவாம். அவைகள் அளித்த உத்தரவில் உள்ள "செல்" என்பதைத் தன்பெயராகக்கொண்டு கறையான் சஞ்சரிக்கின்றதாம்.

## வகுப்புரை.

பொன், வெள்ளி, செம்பு, இரும்பு முதலியன நமது தமிழ் நாட்டில் பண்டுதொட்டு இன்றும் என்றும் இருந்து வருவனவாகும். இவை பிறநாடுகளிலும்

உள்ளனவாயினும், நமது நாட்டுப் பொன் முதலியன போன்று சரித்திரம் உணர்த்தும் சக்தியுடையன வல்லவாம். இவைநமது பண்டைச் சரித்திரம் எழுதப் பட்டுக்கறையாலல் அரிக்கப்படாமல் இருந்துவரும் ஏடுகளாகும். நமது முன்னோர் பொன்னைக்கொண்டு, ஆபரணமே யன்றி நாணயங்களும் செய்து கொண்டிருக்கிறார்கள். பிற்கால நாகரீகத்தார் தத்தம் நாணயங்களில் இன்ன இன்ன நாணயம் இன்ன இன்ன உலோகத்தால் செய்துள்ளன வென்று விசேஷக்குறிப்பெழுதி விளக்கிவருகிறார்கள். நம்மவரோ வெனில், பொன்னாணயத்தைப் பொன் என்றும், வெள்ளி நாணயத்தை வெள்ளி யென்றும் பெயரிட்டு நாணயப் பெயரால், நாணயம் செய்துள்ள உலோகப் பெயரையும் விளக்கியிருக்கிறார்கள். தம்தொழில்முட்டின்றி நடைபெறுமாறு, தக்கநாணயங்களை அமைத்துக் கொண்டவர்களில் இவர்களே முதன்மை பெற்றவர் என்னலாம். ஆதியில் பொன்னாணயம் ஒன்றே கையாடப்பட்டிருக்கவேண்டும். இப்பால் ஜனப் பெருக்காலும், அதனால் தொழிற் பெருக்காலும், அதனால் புறதேசத்தார் வரத்தாலும் உயர்ந்த பொன்னாணயம் போதாதிருக்கவேண்டும்; ஆதலால் வெள்ளி செம்பினாலும் நாணயம் செய்து கொண்டிருக்க வேண்டும்.

பொன் என்பது ரூ 1—9—0 பெறுமானது. வெள்ளி ரூ.0-2-6 செம்புக் காசு 3 பைசா. இவற்றுள்

முக்கிய இரண்டிற்கும் பொன், வெள்ளியென முதற் கருவியின் பெயரையே காரியத்திற்கும் இட்டிருக்க காசுக்கு மட்டும் செம்பொனப் பெயரிடாக்காரணம் பின்னர் வெளிவரும்.

பொன்னுக்கு வெள்ளியும், வெள்ளிக்குக்காசும் முறையே பத்தில் ஒன்றாய் இருப்பது கொண்டு, பண்டைத்தமிழர் தசாம்ச பின்னப் பெருமையை நன்கு கண்டறிந்தவர் என்று வழங்குர் நாணயத்துக்குக் கற்பித்தது கொண்டு காணலாகும்.

இனிப் பொன் என்னும் பெருவிலை நாணயம் சிறு உருப்பெற்றிருந்தமையால் அடிக்கடி கெட்டுப் போய் நட்டத்துக்கு ஏதுவாதல் கண்டு வெள்ளியால் முன்னிலும் ஒரு பெரிய நாணயத்தைச் செய்து கொண்டு பின்னர் பொன்னாணயத்தைக் கைவிட்டிருக்கவேண்டும். அற்றன்று, பொன்னால் அணிசெய்து, பெண்ணாவார்க்கிட்டு, கண்ணாரப் பார்த்துக் களித்தற் பொருட்டுப் பொன்னாணயத்தைக் கைவிட்டார்கள் என்று எண்ணலாம். ஆனால் ஆசைப்பெருக்கால், காசைக் கைவிட்டார்கள் என்பது முட்டின்றிக் காத்துச்செட்டுடன் வாழும் தமிழ் மக்கள் இயற்கைக்கு மாறாகும்; ஆதலால், கெட்டுப்போய்நட்டம் விளையா வண்ணம் அதை விட்டொழித்தார்கள் என்பதே பொருத்தமுடையது. காரணம் எதுவாயிருப்பினும் பொன்னாணயம் எடுபட்டுப்போனது உண்மை.

"வாசிதீரமீவை காசு நல்கவே" எனப்பாடிச் சம்பந்தர் வட்டமில்லாத படிக்காசு வீழிமிழலையிற் பெற்றுள்ளார் என்பதுகொண்டு அவர் பெற்ற காசு பொற்காசேயாம். ஆதலால், அவர் நாள்வரையில் பொற்காசு இருந்ததாகக்கொள்வதற்கு ஐயம் இல்லை. சம்பந்தர் கால நிர்ணயத்தை வாசித்தவர்களுக்கு அக்காலம்நன்குதெரியும். "பணிமதிச்சடையார் தாமும் பன்னிரண்டாயிரம் பொன், தனிபருள் கொடுக்குமாற்றால்" என்று பெரியபுராணக்காரர் கூறியிருத்தலால், சுந்தரர்காலம் வரைப் பொன்னுணயம் இருந்ததாகக் கொள்ளவுங்கூடும். ஆனால் "வன்றொண்டர் மச்சம் வேண்டிக்கொண்டு" என்று அடுத்துக்கூறியிருப்பதாலும், நாணயத்துக்கு மச்சம் வேண்டியதில்லை யாதலாலும், 12,000 என எண்ணிட்டுக் குறித்தபொன், பொன் நாணயம் அன்றென மறுக்கவும் கூடும்.

"பாட்டுவந்து கூத்துவந்தார் படிவாசிமுடிவெய்து" என அதன் பின்னர் வாசியைப்பற்றிப் பேசுவதால், மேற்கூறிய 12,000-க்குப் பின் வரும் பொன், பொன்னுணயமே யெனத்துணியப்பெறும்.

அன்றியும், "ஒரு தோழன் தொண்டருளன்" எனத் தன்பாட்டில் சுந்தரரைக்குறிப்பிடும் மாணிக்கவாசகரும்,

"முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்"

எனக் கூறியிருப்பதால், சுந்தரற்குப் பிற்பட்டவர் என்று எண்ணப்படும் இவர்காலத்தும் பொன்னுணயம் இருந்ததாகக் கொள்ளவும் கூடும். இம் மாணிக்கவாசகருக்குப் பின் இருந்ததாகக் கொள்ள ஏதுக்கள் கண்டிலேம். பொன்னுணயம் முடிவெய்திபகாலம் இதுவாக, தொடங்கிய காலம் ஐங்குறுநூறு முதலிய நூல்களுக்கு முற்பட்ட காலமாகும்; "பொற் பாண்டிற் பொலங்கலம்" என்னும் பிரயோகம் அந்நூலின் இருத்தலின் என்க. ஈண்டுக் கூறிய பிரயோகத்தைக் கொண்டு அக்காசு வட்ட வடிவுடைய தென்பதுமாகும்.

பொன்னுணயத்தை விட்டு வெள்ளியால் பெருநாணயம் செய்து கொண்டவுடன், இப்புதுவெள்ளி நாணயம் வெள்ளியெனப் பெயர் பெறலாயது. பழைய வெள்ளி, வெள்ளிப்பணம் என்றும், சுருக்கத்தின் பொருட்டுப் பணம் என்றும் பெயர்மாறியது. ஆயினும் அதன் விலைமாத்திரையில் மாறுதல் இல்லை. அது பழைய ரூ. 0-2-6மதிப்பையே பெற்று நின்றது. செம்புக்காசுக்குச் சுருக்கத்தின்பொருட்டுக் காசு எனப்பெயரிடலாயிற்று. இக்காசு பெயரிற் சுருங்கியதுபோல விலையிலும் சுருங்கி மூன்று பைசாவிலிருந்து $2\frac{1}{2}$பைசாவாகியது. அதை ஒன்றேகால்காசு என்றும் சொல்லுவார்கள். இற்றைக்கும் கும்பகோணம் முதலிய இடங்களில் சிறு அங்காடிக்காரர்களிடத்தும் இவ்வழக்குக்காணலாம.

இனிப்புறத்தேசத்தார் ஆளுகை மேலிட்ட காலத்தில் பழைய ஒன்றைக்கழித்துப் புதிய வொன்றைப் புகுத்தவெண்ணி "ரூபாய்" எனும் நாணயத்தை வெளியிட்டார்கள். பணம் என்பதை "அணம்" அல்லது 'அணா' எனப்பெயர் மாற்றினார்கள். காசு என்பதற்குக் காசு கட்டிவைத்திருக்கும் பையின் பெயரையிட்டார்கள். ஆகவே, வெள்ளி, பணம், காசு, என்பன முறையே ரூபாய், அணா, பை, எனப்பெயர் மாறினவாகும். வெள்ளி, பணம், காசு என்பனவும் ரூபாய், அணா, பை என்பனவும் இன்னின்ன விலையுடையன வென்பது சொல்லாமலே விளங்கும். இவ்வெள்ளி, பணம், காசு என்பன ரூபாய், அணா, பை என உருமாறிப் பெயர்மாறி விலைமாறினவேயாயினும், கணித அட்டவணையில் எண் சிறிதும் மாறுதல் அடைந்தன அல்லவெனலாம் எனில்:

1 வெள்ளி=16 பணம்=192 காசு,

1 ரூபாய்=16 அணா=192 பை,

எனநிற்றலால் என்க.

இப்புது ஏற்பாட்டில் ரூபாயும், பையும் நாணய உருப்பெற்றனவேயன்றி அணா, உருப்பெறாமல்பெயர் மாத்திரையே நின்று நிலாவியதாகும். இக்குறையை நமது எட்வர்ட் (Edward VII.) சக்கரவர்த்தியார் நிவர்த்திசெய்தார். ஆனால் அவர் செய்த நாணயம் வெள்ளியாலல்லவே எனில், வெள்ளியாற் செய்த இரண்டணா நாணயத்திற்கு அரைமட்டாய் அமைந்து

பழையபொன் நாணயம்போல் கெட்டு கட்டம் விளைக்கும் என்னும் கருணையால் இப்படியியற்றினார் எனக். உருவின்றி நின்ற அணுவுக்கு உருவம் கொடுத்த தந்தைபோலக் கெட்டொழிந்த பொன்னாணயத்தை மீட்டும் விரும்பியளிக்க நமது மாட்சிமைதங்கிய ஜார்ஜ் (George V) சக்கரவர்த்தியார் திருவுளம் கொண்டிருக்கிறாராம். இவர் செய்யவெண்ணியிருக்கும் பொன்னாணயத்தின் விலை பத்து ரூபாயாம். இதனால் ஒழிந்த ஒன்று, மீண்டும் உருப்பெறுவதுமன்றி, பண்டைத் தசாம்சபின்னக் கற்பனையும் பெறுவதாகும். ஆதலால் பண்டைத் தமிழர் பெருமை மீண்டும் உயிர்த்தெழும் என்பதற்கு இது ஓர் சூசனையாகும். இம்மகான் நீடூழி வாழ்வாராக!

ரூபாய் வெளிவந்தபின் பழைய வெள்ளி, பணம் காசுகளின் கதி யாதாயிற்றெனின், 'கன்னான் நடமாடக் குயவன் குடிபோயினன்' என்றதுபோல, புது ரூபாய் வந்ததும் பழைய வெள்ளி புறப்பட்டு, பண்டைத்தமிழ் நாட்டின பாகமாகிய சீயம், மலயம் முதலிய நாட்டில் குடியேறி, விலையிற் சிலமாறாது இடன் அந்நாட்டு நாணயமாய் வழங்கி வருகின்றது. பணம், காசு, இரண்டும் வெள்ளி போலவே விலையில் மாறுதலடைந்து பழையபெயரோடு திரிசிரபுரம் முதலிய இடங்களில் வழங்கி வருகின்றன.

| நாணயம் | முந்தியவிலை | தற்காலவிலை |
|---|---|---|
| | ரூ. அ. பை. | ரூ. அ. பை. |
| வெள்ளி | 2—8—0 | 2—4—0 |
| பணம் | 0—2—6 | 0—2—0 |
| காசு | 0—0—2½ | 0—0—1 |

நிற்க, தமிழர்கள் செம்பினால் சிறுவிலைநாணயம் செய்துகொண்டதுமன்றி ஆனும் பாத்திரங்களும் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் முதல் முதல் செய்துகொண்ட செம்புப்பாத்திரம் செம்பு எனலாகும். அது இக்காலத்தில் சொம்பு என மருவடைந்து வழங்கும். இச்செம்பு என்னும் பாத்திரம், செம்பு நாணயத்துக்கு முற்பட்டகாலத்ததாகும். ஏனெனில் செம்புப்பாத்திரம் பிற்பட்டதாயின செம்பு நாணயம் பொன்வெள்ளி நாணயங்களைப்போலக்காரணகாரியப் பொருட்டதாய்ச் "செம்பு" என்றே பெயர் பெற்றிருக்கும் ஆதலின் என்க. இச்செம்பு ஒரு ஜலபாத்திரம். இது 1படி முதல் 1½படி வரை பிடிக்கக்கூடியது. இது ஆதியில் புழங்குவதற்கு ஏற்றதாயிருந்திருக்கலாம். இப்பால் ஒருபாத்திரத்தில் இருந்த ஜலத்தைப்பலபேர் அருந்துவது அநுசிதம் என்றெண்ணி வார்த்துண்ண ஒருசிறு பாத்திரம் செம்பினாலேயே செய்திருக்கவேண்டும். இதற்குச் செப்பு என்றுபேர். இது இங்கிலீஷ் "கப்புக்கு" ஒத்ததாகும். சுமார் ஒரு சேர் பிடிக்கும்; ஒருவர் அருந்தப்போதுமானது; வாயகன்றுள்ளது; வாயில் வைத்து உறிஞ்சியருந்த

உத்தேசித்தது போலும். இச்செப்பு செம்புக்கு முந்தியது என்று சொல்ல நியாயம் இல்லை. செம்பின் இயற் பெயர் பெரியபாத்திரத்துக்கும் செப்பெனமாறுதலடைந்த பெயர் சிறு பாத்திரத்துக்கும் இட்டு வழங்குதலின் என்க. அன்றியும் ஆறு குளம் இல்லாத ஊர்களில் நீர் எடுக்க ஏற்றவிதமாய்ச் செம்பு அமைந்திருப்பதும் எளாவிதமாய்ச் செப்பு அமைந்திருப்பதும் அவைகள் பிறந்த முறையைப் பற்றி நாம் கொண்ட கோட்பாட்டை வற்புறுத்தும். செப்பைச் சிறு உருவச் செம்பாகச்செய்து கொண்டிருந்தாலோவெனின், களிம்பு பற்றும் செம்பை உள்ளும் புறமும் ஒத்தாற்போலப் புளியிட்டு விளக்க இயலாதென்று அவ்விதம் செய்திருக்க மாட்டார்கள். செய்திருக்கவும் இல்லை. விரல் கூட நுழையாத குறுகிய வாயையுடைய சிறு செப்புப்பாத்திரம் பலர் கையில் பார்க்கிறோமே என்றாலோ அது, ஆதியிலுள்ளவர் கருத்துக்கு அமையாததாகும். பின்னும் செல்லச் செல்லக் குடும்பம் பல்கிப்பெருகியதனாலும் வருவார் போவார்க்கிட்டருந்தப் போதாமையினாலும், செம்பினும் பெரிய பாத்திரம் வேண்டலாயிற்று. இதுதான் செப்புக்குடம். இவ்வண்ணம் நீரை வாயில்வைத்துப் பருகுவதும், நீர் வைக்கும் பாத்திரங்களைச்செம்பினால் செய்திருப்பதும், தமிழர்கள் சவுக்கிய நூல் நன்குணர்ந்தவர் என விளக்குவதாகும். பிற்கால நாகரீகத்தார் இப்போதுதான் இவ்வுண்மையைக்

கண்டு கையாடுகிறார்கள். இக்காலத்தில் பித்தளைக் குடத்தைச்செப்புக்குடம் என்கிறார்கள். இதுபோலவே

N. B.—1. வாயில் வைத்து உறிஞ்சி நீரருந்துவது, சுவாசாசயமுதலிய கருவிகளுக்கு அநுகூலம்.

2. செப்பு ஜலத்திலுள்ள பலகெடுதல்களை மாற்றிச்சுத்திகரிக்கும் என்பது தத்துவநூலுணர்ந்தோர் துணிபு.

இனிச்செம்பு, செப்பு, எனப்பெயர் கொள்ளாது செப்புக்குடம் எனப்பெயர் கொண்ட இப்பெரிய பாத்திரம், தான் வந்தவரிசையை உணர்த்துவதுமன்றிப் பின்னும் ஒருசரித்திரத்தைப் பிறங்க வெளியிடும். குடம் என்றால் குடைந்தெடுக்கப்பட்டது எனப்பொருள்; குடத்தைப்போன்ற உபயோகமுடைய தோண்டி யென்பதற்கும் இதுவே பொருளாதலும் காண்க. குடைந்தெடுப்பது என்ற பொருளால், முதற்காரணப்பொருளை மொத்தாகாரமாய் வேண்டிய பருமனும், உருவமும் உடையதாய் அமைத்துக் கொண்டு தக்க கருவியால் உள்ளீட்டைக் குடைந்தெடுக்கப் பெற்றது குடம் எனப்போதரும். செப்புக்குடத்தைப் பற்றியமட்டில், மேற்கூறியது சரதமாயின் செம்பு, செப்பு, என்பனவும் அவ்வண்ணமே குடைந்தெடுக்கப் பட்டனவாகும். அப்படிக் குடைந்தெடுக்கப் பட்டனவாகச் செம்பு, செப்பு, என்பனவற்றின் பெயர்ப்பொருளில் அறியக்கிடக்

தன ஒன்றுமில்லை. அப்படிக் குடைந்தெடுக்கவும் செம்பு எளிதில் இடங்கொடாது; செம்பின் திரிபாகிய செப்பு என்னும் அடையைக் குடம் பெற்றிருப்பதால், குடம் செப்பிற்குப் பிற்பட்டதென்றும் வெளிவரும். அன்றியும், குடத்தின் முதற்காரணம் செம்பல்லவென்பதும் வெளிப்படை. அதற்கு மண் முதற்காரணமாகுமோவெனின், மண்ணிற் செய்த உருவைக் குடைந்தெடுப்பது இலகுவாயினும், குயவன் மண்ணாற் குடத்தை வனைந்தான் என்பதில் குடைந்தான் என்னுமல், வனைந்தான் என்னும் வினையானும், செப்பு என்பதுபோல மண்ணுங் குடத்திற்கு அடையாக நிற்றலானும், மண் முதற் காரணம் என்பது அத்துணைப் பொருத்தமுடையதன்று. அன்றியும் ஈரமண்ணால் செய்துகொண்ட உருவை மெல்லிய மேலீடு கொடுத்துக்குடையும்போது, உருச் சிதைவதும் அழகிய உருவினின்றும் கோணலடைவதும் நேரிடுமாதலால் மண், குடத்துக்கு முதற்காரணம் அல்லவென்பதைப் பின்னும் வற்புறுத்தும். குடத்திற்கு முதற்காரணம் யாதோ பிறிது எனில், குடைதற்றொழிலுக்கு ஏற்றதாய் இருப்பது கொண்டும், காட்சிப் பிரமாணமுடையதாயிருப்பது கொண்டும், அம்முதற்காரணம் மரமாதல் வேண்டும் என்பது பெறலாகும். யதிகள் வைத்தாளும் குடம் (கடம்) பெரும்பாலும் மரத்தினியன்றதேயாம். அன்றியும் தமிழ் நாட்டின் வடக்கெல்லையெனக் கொள்ளப்படும் வேங்கடத்தில், அல்லது திருப்பதியில், மரவை

என்ற பாத்திரம் விற்பதும், வாங்குவதும் யாரும் அறிந்ததாகும். மரவையென்பது, படிபோலும் உருவம் உடையதாய் அடி முதல் நுனி வரை ஓரளவினதாய், இருக்கும் பாத்திரம் ஒன்றே என எண்ண வேண்டாம். வாய் குறுகி, வயிறு பெருத்துக் குடம் செம்புபோன்ற உருவுடைய பாத்திரங்களுக்கும் மரவை யென்றே பெயர். கணுக்களையுடைய மேல் மரத்தால் செய்தால் ஒட்டையுண்டாக இடமுண்டு என்று கருதி, மண்ணுக்குள் மறைந்து கிடக்கும் வேரினல் செய்துகொள்வது பண்டையோர் வழக்கு. வேர், வேண்டிய அளவு கிடைப்பது அருமையாதலால், விற்பவர்கள் சுயநயம் வேண்டி விலைநயம் காட்டிக் கணுக்களுள்ள மேல் மரத்திலும் மரவை செய்து விற்கத்தலைப்பட்டார்கள். "பொற்போர் புரிவர் பிறர் பொருளும் தமபோற்பேணிப்புரி வணிகர்" என்ற வணிகலக்ஷணத்தை மறந்த அவர்கள் மோசத்துக்குப் பின்னும் ஆளாகாமல் மரவை கொள்வதை ஜனங்கள் மட்டுப்படுத்தினர்கள். இது தான் மட்குடம் முதலியன தலைப்பட்ட காலமாகும். விலை நயம் கருதி ஏழைகள் மட்குடம் செய்துகொண்டார்கள்; சுகம் பேணும் முறை கருதி இடையாயார் செப்புக்குடம் செய்துகொண்டார்கள்; பெருமை வேண்டித் தலையாயார் சிலர் வெள்ளிக்குடம் செய்துகொண்டார்கள்; மடாலயம், தேவாலயங்களிற் பொற்குடமும் செய்துகொண்டார்கள். இவ்வண்ணம் ஆதியில் உண்டான மரவை வியாபாரம் அருகலாகி,

"யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற."

என்ற சுருதிக்கு அனுபவப்பிரமாணமானது காண்க. மண், செம்பு என்பன குடத்துக்கு அடையானதுபோல மரம் அடையாகாமல், மரவை எனக் காரணகாரியப்பொருட்டதாய் நிற்றலும் குடம், ஆதியில் மரத்தாலாயது என்பதற்குச் சான்று கூறும்.

இனி இக்குடம் வெளியிடும் உண்மை பின்னும் ஒன்றுண்டு. ஒரு பெரிய ஊரில், மூலைக்கு ஒரு வீடாக நுழைந்து, வீட்டுக்கு ஒரு குடம் எடுத்து வந்து, 100 குடத்தை ஒரு சேரவைத்து, ஒப்பு நோக்கில், 97 குடம் ஓரே அளவினதாயும், இரண்டு குடம் சற்றுச்சிறியனவாயும், ஒன்று சற்றுப் பெரியதாயும் இருக்கக் காணலாம். ஒரு குடும்பத்தில், பாலரோ விருத்தரோ, ஒவ்வொரு நபருக்கும் தினம் சராசரி 8 கியாலன் ஜலம் அவசியம் வேண்டும் எனச் சுகம் பேணும் முறையை அனுசரிப்பவர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். ஒரு கியாலன் என்பது, நாழி அல்லது ஒருபடியாகும். எட்டுக் கியாலன், எட்டுப் படி அல்லது நான்கு மரக்காலாகும். ஒரு குடம் பிடிப்பதும் நான்கு மரக்கால்தானாகும். உப்பில் துப்பும், நீரில் சீரும் வேண்டும் என்று சிக்கனவாழும் தமிழ்மக்கள் இக்கணக்கை முன்னரேயறிந்து, நீர் எடுக்கும் குடத்தை இந்த அளவினதாய்ச் செய்துகொண்டிருந்தார்கள். மற்றைப் பாத்திரம் பெரிதும்

சிறிதுமாயிருக்கக் குடத்தை மட்டும் கணக்கோடு செய்ததேன் எனில், நீர் சேகரிக்கும் பாத்திரம் குடும்பத்துக்குத் தக்கபடி பெரிதும் சிறிதுமாகச் செய்துகொள்ளப்பட்டது. நீர் எடுக்கும் பாத்திரம் மட்டும் கணக்கோடு இருந்தால், 'சொக்கனுக்குச் சட்டியளவு'என்றாற்போல நீர் கொண்டு வருபவர்கள் குடக்கணக்காய்க் கொண்டுவந்து சேர்த்துவிடக்கூடும் என்பதுபற்றி என்க. "உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்" என்பதும் கிரககிருத்தியங்களுக்கான கணக்கேயாம். இவ்விதமாய், கிரககிருத்தியங்களுக்கு வேண்டிய கணக்கைச் சுளுவில் அறிவிப்பதும், எளிதில் அனுசரிக்கச் செய்விப்பதும் பண்டையோர்க் கியற்கையென்பதே இக்குடம் தெரிவிக்கும் மற்றொரு உண்மையாம்.

இனிக்குடத்தை உருட்டித்திரட்டி உள்ளீட்டைக் குடைந்தெடுக்க உறுதியான ஆயுதங்கள் வேண்டப்படும். அவை பொன், வெள்ளி, செம்பால் செய்யப்பட்டனவாயின், அத்தனை உறுதியுடையனவாகா; இலகுவான விலையுடையனவுமாகா. ஆதலால் அவைகள் இரும்பினாலே செய்யப்பட்டனவாகும். இற்றைக்கும் அவ்விதக் கருவியே உபயோகப்பட்டு வருவதும் நமது கோட்பாட்டை உறுதிப்படுத்தும்.

இனி நாணயங்களுக்கு, முத்திரை முதலியன பொறிக்க, நயமுடைய அயமும் வேண்டியிருந்திருக்கும். ஆதலால் பொன் முதலிய பஞ்சலோகங்களும்

பண்டைத்தமிழ்நாடு பெற்றுள்ளதாகும் என்பதும் காணலாம்.

இனி, குடத்தைக் குடைந்தெடுத்து ருவாக்கின தச்சனும், குடையுமாயுதஞ் செய்த கொல்லனும், செம்பு செய்த கன்னனும், நாணயம் முதலியன செய்த தட்டானும், பண்டையோர்க்குண்டென்பது வெளிவருவதுடன், மட்குடம் வனையுங் குயவனிருப்பும் அறியக்கூடியதாகிறது. நாணயத்துக்கு இயற்றுதற் கருத்தா ஆகிய தட்டான் இருந்தாற்போல, ஏவுதற் கருத்தாவாகிய அரசன் ஒருவன் இருந்திருக்கவேண்டும். ஆகவே பண்டைத்தமிழர் தக்க அரசாட்சிக்குள் அமைந்தவர் என்றும் வெளிவரும்.

இனி கிரககிருத்தியங்களுக்கு வேண்டியன வமைத்துக்கொள்ளப் பல கருவிகள் வேண்டியிருந்தனபோல, அரசகாரியங்களுக்கும் வில், அம்பு, வேல், வாள் எனப் பல கருவிகள் இன்றியமையாதனவாயின. வில் என்பது, கைப்பிடி மரத்தாலும், நாண் கயிற்றாலும் அமைக்கப்பெற்ற ஓர் ஆயுதம். கயிறு நூலாலும், சணலாலும் ஆவது. ஆகவே, பருத்தி முதலிய பண்டங்களும் முன்னரேயிருந்துள்ளனவாகும். அம்பு, வேல், வாள், எஃகினாலாயவை. எஃகு என்பது இரும்பினின்றும் சுத்தி செய்து எடுத்த பொருள். எஃகினாலாய ஆயுதம், எஃகெனக் காரண காரியப்பொருட்டதாய், வந்துள்ளது. அது

"செய்கபொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூறிய தில்" என்னும் திருக்குறளா லறியலாகும். இரும்பைச் சுத்திசெய்யும் முறை இந் நாட்டார் பண்டுமுதல் அறிந்துள்ளார் என்பதும் வெளிப்படை. இரும்பைச் சுத்தி செய்யும் முறையைக் கற்குமுன், என்பினாற் கருவிகள் செய்யப்பட்டனவாம். இந்திரன் ததீசியை இரந்து, முதுகின் முள்ளந்தண்டைப்பெற்று ஆயுதம்செய்து வலாசுரனை வென்ற காலம், என்பு கொண்டு ஆயுதம் இயற்றிய காலத்தின் தொடக்கமாகும்.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு" என்னுந்திருவாக்கும் ததீசி முனிவருடைய அன்புடைமை கண்டெழுந்ததாகும். ஆகவே, என்புகொண்டு ஆயுதம் செய்து கொண்ட காலம் நாயனார் காலத்துக்கு முற்பட்ட காலம் என்னும் சரித்திர உண்மையும் அறியலாகும் இந்திரன் தனக்குரிய வச்சிராயுதம் தேய்ந்து மழுங்கிய காரணத்தால் வலாசுரனை வெல்லும் வலம் இழந்து விட்டுனவையிரக்கத் ததீசியின் எலும்பு பெறுவானாயினன் எனவே என்பாயுதத்துக்கு முற்பட்டது வச்சிராயுதம் என்பது பெற்றும். வச்சிராயுதம் வச்சிரத்தாற் செய்ததாகும். வச்சிரம் கற்களிற் சிறந்த வோர் கல். ஆகவே வச்சிராயுதம் கல்லிற் செய்த ஆயுதமாகும். ஈண்டுக்கூறியது கொண்டு ஆயுதம் முதலில் கல்லாலும், அப்பால் என்பாலும்

இப்பால் எஃகாலும் ஆகிவந்த முறையைப் பெறுகின்றோம். இம்முறை பிற்காலத்தாருடைய ஆயுதம் பிறந்த முறைச்சரித்திரத்துடன் ஒத்து நிற்பது கண்டு களிக்கத்தக்கதாம்.

இனி நாணயம் செய்தகாலத்து, ஒரு புறத்தில் இட்ட தெய்வ முதலியவற்றின் உருவையும், மற்றோர் புறத்தில், நாணயத்தின் பெறுமானத்தையெண்ணலும், செல்லைப்பெறும் இடம் முதலியவற்றை எழுத்தாலும் பொறித்திருக்கவேண்டும். ஆகவே உருச் சித்திரிப்பதிலும், எண் முதலிய அச்சிடுவதிலும் பண்டைத்தமிழர் பழக்கமுடையவர் என்பது பெறலாகும். அன்றியும், இவர் நாணயஞ்செய்து கொண்டகாலம், 'எண்ணும்எழுத்துங் கண்ணெனத் தகும்' என்னுந்திருவாக்கெழுந்த காலத்துக்கும் முற்பட்டதாகும்.

## தொகுப்புரை

இதுகாறும் கூறிப்போந்ததுகொண்டு பண்டைத்தமிழர்கள்,

1. பொன் முதலிய உலோகங்களை வேண்டிய அளவு படைத்திருந்தார் என்றும்; இவற்றுள் பொன் வெள்ளியால், நாணயம், ஆபரணங்களும், செம்பினால் நாணயமேயன்றிப்பாத்திரங்களும், எஃகினால் கிரககிருத்தியத்துக்கும், அரசகாரியங்களுக்கும் வேண்டிய பகைருவிகளும் செய்துகொண்டார்கள்

என்றும்; பொன்னுணயத்தைப் பொன் என்றும்; வெள்ளி நாணயத்தை வெள்ளியென்றும்; செம்புப் பாத்திரத்தைச் செம்பென்றும்; எஃகாயுதத்தை எஃகென்றும், பெயரிட்டழைத்தலால் காரியப்பெய ரால், காரணப்பொருளேயும் ஒருசேர விளக்கிவந்தார் கள் என்றும்;

2. "எஃகதனிற் கூறியதில்" என்றதனுல், எஃ காயுதம் நாயனுர் காலத்துக்கு முற்பட்டதென்றும்; எஃகுக்கருவிக்கு முற்பட்டது என்புக்கருவியென் றும்; என்புக்கருவிக்குத் ததீசி காலமே தொடக்க காலம் என்றும்; எக்கருவிக்கும் முற்கருவி கற் கருவியேயென்றும்; இக்கருவிகளின் உற்பத்தி காலம், பிற்காலத்தார் கூறும், கருவி பிறந்த சரித் திரகாலத்தை ஒத்து நிற்றல் வியக்கத்தக்கதென்றும்;

3. எஃகுக் கருவியின்றிப் பாத்திரம் பிறந்திரா தாதலில், பாத்திரகாலம் ஆயுதகாலத்துக்குப் பிற் பட்டதேயென்றும்; செம்பும், செப்பும் உண்டான பின்னரே, குடம் உண்டானதென்றும்; குடத்தின் உருவும், அளவும், ஒரே மாதிரியாய் இருப்பது கொண்டு பிற்காலத்தார் கண்டறிந்ததாகக்கொள்ளப் படும் சுகாதார அளவை தமிழர் முன்னரே அறிந்து கையாடிவந்தார்கள் என்றும்; ஜலபாத்திரம் அனைத் தும் செம்பாலமைத்திருப்பதுகொண்டு, தமிழர் நீரை எளிதில் சுத்தி செய்யும் முறையைக் கற்றுள்ளார் என்றும்;

4. பொன், வெள்ளி நாணயங்களுக்குப் பொன் வெள்ளியெனப் பெயரிட்டதுபோலச் செம்பு நாணயத்துக்குச் செப்பு எனப்பெயரிட வேண்டியிருக்கச் செம்பால் செய்த முதற்பாத்திரத்துக்கு இட்டு இருப்பதைக்கொண்டு பாத்திரம் நாணயத்துக்கு முற்பட்டதென்றும்;

5. பொன், பணம், காசு ஆகிய நாணயங்கள் ஆதியில் தசாம்சகற்பனையோடு வழங்கினமையால், தமிழர் தசாம்ச பின்னத்தைப் பெரிதும் மதித்துக் கையாடினவர்கள் என்றும்;

6. நாணயத்துக்கு முத்திரை பொறித்தமை கொண்டு, சித்திரம் முதலிய பொறிக்கவும், செதுக்கவும் வல்லுநர் என்றும்; நாணயம் முதலிய காரியத்தால், அவ்வவற்றிற்கான முதற்கருவி, துணைக்கருவிகளிருந்ததுடன், இயற்றுதற் கருத்தாவாகிய தட்டான் முதலிய சிறந்த தொழில் வல்லுநரும், ஏவுதற் கருத்தாவாகிய சிறந்த அரசர்களும் இருந்தார்கள் என்றும்; அரசனிருந்ததால் பண்டையோர் தக்க அரசாட்சிக்குள்ளமைந்தவர்கள் என்றும்;

7. பொன்னே முதலிற்றோன்றிய நாணயம் என்றும்; அக்காலம் ஐங்குறுநூறு முதலிய பழைய நூல்களுக்கு முற்பட்ட காலம் என்றும்; பணங்காசு, பின்னிட்டு வந்தனவென்றும்; நாணயம் மாறுதலடைந்த காலத்துப் பொன்னொழியப் பின் வந்தது

புதுவெள்ளியென்றும்; இது இப்பால் புறம்பே குடியோடியதென்றும்; அடுத்துநின்ற பணம் காசு சிற்சில மாறுதலுடன் இற்றைக்கும் திரிசிரபுரத்தில் வழங்கிவருகின்றனவென்றும்; அணா என்பது உருப்பெறாமல் பெயர் மாத்திரையே நெடுநாள் வழங்கி வந்ததென்றும்; அக்குறை எட்வர்ட் சக்கரவர்த்தியார் காலத்து நீக்கப்பெற்றதென்றும்; பொன் நாணயம் இற்றொழிந்தது சம்பந்தர் காலத்துக்கு முன்னல்லவென்றும்; மாணிக்கவாசகர் காலத்துக்குப் பின்னராம் என்றும்; இற்றொழிந்த பொன் நாணயம் நமது ஜார்ஜ் சக்கரவர்த்தியார் காலத்தில் சிறந்த உருவோடு மீண்டும் உயிர்த்தெழுந்து நிலாவும் என்றும்; அதற்காக அவர் நீடூழி வாழ்கவென்றும்; மண்ணும் மண்ணுள் மறைந்து கிடந்த பொன்னும் பிறவும் பண்டைத் தமிழர் சரித்திரத்தை சுருதி, யுக்தி, அநுபவங்களைக்கொண்டு இன்று கூறுவனவாயின.

இவ்வியாசம் தன் சரிதமுணர்த்து மொழி என்ற தலைப்பில், ஏற்கனவே கூறியுள்ள, நோய், அணி, ஊர் ஆகிய மூன்று வியாசங்களை ஒட்டிப்பிறந்த நான்காம் வியாசம் ஆகும்.

இதை வெளியிடுமாறு செய்வித்த இக்கரந்தைத் தமிழ்ச் சங்கத்துக்குத் தீர்க்க வந்தனம் அளித்து என் சிறு வியாசத்தைப் பூர்த்தி செய்கிறேன்.

# அநுபந்தம்.

## தமிழ்மொழிவாழ்த்து.

௧

திருவனந்தபுரம் மகாராசா கலாசாலைத் தத்துவ
போதகாசிரியராயிருந்து காலஞ்சென்ற கனம்
பெ. சுந்தரம்பிள்ளையவர்கள் எம். ஏ.
இயற்றியருளியது.

பஃறொடைக் கொச்சகக்கலிப்பா,

இவையிரண்டும் ஆறடித்தரவு.

நீராருங்கடலுடுத்தநிலமடந்தைக்கெழிலொழுகுஞ்
சீராரும்வதனமெனத்திகழ்பரதகண்டமிதிற்
றக்கசிறுபிறைநுதலுந்தரித்தநறுந்திலகமுமே
தெக்கணமுமதிற்சிறந்ததிராவிடநற்றிருநாடும்
அத்திலகவாசனைபோலனைத்துலகுமின்பமுற
எத்திசையும்புகழ்மணக்கவிருந்தபெருந்தமிழணங்கே.

பல்லுயிரும் பலவுலகும்படைத்தளித்துத்துடைக்கினுமோர்
எல்லையறுபரம்பொருண்முன்னிருந்தபடியிருப்பதுபோல்
கன்னடமுங்களிதெலுங்குங்கவின்மலையாளமுந்துளுவும்
உன்னுதரத்துதித்தெழுந்தேயொன்றுபலவாயிடினும்
ஆரியம்போலுலகவழக்கழிந்தொழிந்துசிதையாவுன்
சீரிளமைத்திறம்வியந்துசெயல்மறந்துவாழ்த்துதுமே. ௨

இவை பன்னிரண்டும் தாழிசை.

கடல்குடித்தகுடமுனியுன்கரைகாணக்குருநாடில்
தொடுகடலையுனக்குவமைசொல்லுவதும்புகழாமே. ௧

ஒருபிழைக்கா அரனார்முன்னுரையிழந்துவிழிப்பாரேல்
அரியதுனதிலக்கணமென்றறைவதுமற்புதமாமே. ௨

சதுமறையாரியம்வருமுன்சகமுழுதுநினதாயின்
முதுமொழிநீயநாதியெனமொழிகுவதும்வியப்பாமே. ௩

வேகவதிக்கெதிரோறவிட்டதொருசிற்றேடு
காலநதிநினைக்கரவாக்காரணத்தினறிகுறியே. ௪

கடையூழிவருந்தனிமைகழிக்கவன்றோவம்பலத்துள்
உடையாருன்வாசகத்திலொருபிரதிகருதினதே. ௫

தக்கவழிவிரிந்திலகுஞ்சங்கத்தார்சிறுபலகை
மிக்கநலம்சிறந்தவுன்றன்மெய்ச்சரிதவியஞ்சனமே. ௬

வடமொழிதென்மொழியெனவேவந்தவிருவழியவற்றுள்
கெடுவழக்குத்தொடர்பவரேகிழக்கொடுமேற்குணராரே. ௭

வீறுடையகலைமகட்குவிழியிரண்டுமொழியானால்
கூறுவடமொழிவலமாக்கொள்வர்குணதிசையறியார். ௮

கலைமகடன்பூர்வதிசைகாணுங்காலவள்விழியுள்
வலதுவிழிதென்மொழியாமதியாரோமதியுடையார். ௯

பத்துப்பாட்டாதிமனம்பற்றினார் பற்றுவரோ
எத்துணையும்பொருட்கிசையுமிலக்கணமில்கற்பனையே ௧௦

வள்ளுவர்செய்திருக்குறளைமறுவறநன்குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி யொருகுலத்துக் கொருநீதி. ௧௧

மனங்கரைத்துமலங்கெடுக்கும்வாசகத்தின்மாண்டோர்கள்
கனஞ்சடையென்றுருவேற்றிக்கண்மூடிக்கதறுவரோ. ௧௨

## தனிச்சொல்

எனவாங்கு

## ஆசிரியச் சுரிதகம்

நிற்புகழ்ந்தேத்துநின்னெடுந்தகைமைந்தர்
பற்பலர்நின்பெரும்பழம்பணிபுதுக்கியும்
பொற்புடைநாற்கவிப்புதுப்பணிகுயிற்றியும்
நிற்பவர்நிற்கநீபெறும்புதல்வரில்
அடியேன்கடையேனறியாச்சிறியேன்
கொடுமலையாளக்குடியிருப்புடையேன்
ஆயினுநீயேதாயெனுந்தன்மையின்
மேயபேராசையென்மீக்கொளவோர்வழு
உழைத்தலைதகுதியென்றிழைத்தவிந்நாடகம்
வெள்ளியதெனினும் விளங்குநின் கணைக்காற்
கொள்ளியசிறுவிரலணியாக்
கொண்மதியன்பேகுறியெனக்குறித்தே

௨

மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவான், திரிசிரபுரம்
எஸ். பி. ஜி. கலாசாலை முதற்றமிழ்ப் பண்டிதர்
கனம் மு. வேங்கடசாமிநாட்டாரவர்கள்
இயற்றியது.

---

திருவளருஞ்செந்தமிழாந்தேமலர்தானெப்பொழுதும்
முருகுவிரித்தொளிரும்மூவுலகுமம்மானை
முருகுவிரித்தொளிருமூவுலகுமாமாயின்
அருமைமிகுவானவரும்அணிவரோ அம்மானை
அங்கொன்றைத்தாரனுமுன் அன்புவைத்தான் அம்மானை. ௧

தேங்குசுவையிற்கவினிற்றிகழ்பழமையின்மிகுந்த
பாங்கினுயர்மொழிநம்பைந்தமிழ்காணம்மானை
பாங்கினுயர்மொழிநம்பைந்தமிழேயாமாயின்
ஆங்கிலத்திற்பொருண்மிகவேயளிக்குமோவம்மானை
அகத்தும்புறத்தும்அளித்திடுங்காணம்மானை. ௨

குன்றவண்டமிழாலுங்குலத்தாலுங்குறுமுனிவன்
தென்றிசையேயுயர்ந்ததெனச்சேர்ந்தனன்காணம்மானை
தென்றிசையேயுயர்ந்ததெனச்சேர்ந்தனன்றேயாயின்
அன்றவன்றன் மற்றையரினடைந்ததெவனம்மானை
அம்மகுடமுனியாகும்புகழடைந்தானம்மானை. ௩

வள்ளுவரேசாற்றுகின்றார்மன்னுதமிழ்மாண்பனைத்தும்
ஒள்ளியசீர்நால்வருமேயுரைக்கின்றாரம்மானை
ஒள்ளியசீர்நால்வருமேயுரைக்கின்றாராமாயின்

எள்ளலிலாவம்மையழகியைபுறுமோவம்மானை
இருந்தமிழ்யாப்புணரின்வனப்பெல்லாமாமம்மானை. ௪

எவ்வுலகிமேற்றுருமனத்தெண்ணுவனவண்டமிழின்
அவ்வையருளானளித்திடுங்காணம்மானை
அவ்வையருளானளித்திடுமேயாமாயின்
செவ்வியசிந்தாமணிநோசெப்புகமோவம்மானை
சிந்தாமணிதருவான்றெய்வமன்றோவம்மானை. ௫

௬

மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவான், காட்டுப்
புத்தூர் ஜமீன்தார் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
கனம் அ. கந்தசாமிபிள்ளை அவர்கள்
இயற்றியன.

---

தமிழ்மகள் துயிலெடை நிலை.

---

இராகம்-பூபாளம்.

பொழுதுபுலர்ந்ததுயாஞ்செய்ததவத்தால்
புன்மையிருட்கணம்போயினமுன்பே
தொழுதுனைவாழ்த்திவணங்குதற்குன்றன்
தொண்டர்பல்லாயிரர்சூழ்ந்துநிற்கின்றோம்
முழுவதுமெமையுடையாய்! உயர்நடையாய்!
முகமலர்ந்தருண்மொழிபுகல்வதுமறந்தே
விழிதுயில்கின்றதோ? இன்றமிழ்த்தாயே
வியப்பிதுகாண்பள்ளியெழுந்தருளாயே.

இளங்கதிர்ஞாயிறெழுவனெம்மணங்கே
எண்டிசைசென்றுசென்றுன்புகழ்புகுவ
துளங்கவர்ந்தயலாரையுமிங்கே
யுய்த்ததுன்றீஞ்சுவைமெத்தவுவந்தேம்
வளங்கெழுமாங்கிலமாரியமென்னும்
மங்கையர்நின்பணிகொண்டிதோநின்றார்
விளங்கவெம்முளத்தொளிர்செந்தமிழ்த்தாயே
விழிமலர்ந்தேபள்ளியெழுந்தருளாயே. ௨

---

## தமிழ்த்தாய் தன்மக்களுக்குரைக்கும்செவியறிவுறூஉ

எனமகன.

தகும்! தகும்!! நின்றன்னுணர்ச்சிசாலமகிழ்ந்தேயுனக்கு
மிகுந்தவாசீர்வசனம்விளம்புகின்றேனென்மகனே! ௧

உன்கடமைமற்றும்உளவெனினும்முற்கடமை
என்கடமை[1]யென்றுணர்ந்தாயீதுதகும்என்மகனே! ௨

ஆங்கிலமேதலையென்னஅலைப்பட்டுமூழ்காமல்
நீங்கிலமென்றெனையாய்ந்துநிற்பவராரென்மகனே! ௩

எந்தமொழியாயினுந்தம்மிதமொழியென்றயல்நாட்டார்
சொந்தமொழிபாராட்டல்தோன்றிலதோ? என்மகனே! ௪

எண்ணாயிரமைலுக்கெட்டியுளவோர்மொழிதான்
நண்ணாநிலையடையநாட்டினர்பார்! என்மகனே! ௫

வீட்டிற்குள்ளேயுமெனைவெறுத்துரைப்பைநீயோபின்
நாட்டின் வெளிப்புறத்தும் நாட்டவலாய்? என்மகனே! ௬

அன்னியருன் கருத்தறிவானுதரித்துன் மொழிபேச
வுன்னியுனதோர் மொழியாலோ துலையோ?" என் மகனே! எ

ஒருக்கவுலகத்தின் பாலெலாமொன்றும்நாகரிகம்
பெருக்கநான் மட்டுஞ்சும்மாயிற்படவோ? என் மகனே! அ

ஓர்தேயமோர்பால்மற்றோர் சாதியோரோர்கால்
சீர்மையுற்றார் தத்தம்சிறப்புமொழியால்மகனே! கூ

ஜப்பானமுன்னேற்றந்தனையடைந்துபேர்பெற்ற
தப்பா! தன்மொழிவளர்ச்சியாலேகாணென் மகனே! க0

காலத்திற்கேற்ற கருத்துயர்ந்துசீரோங்க
ஞாலத்தில்நிற்கின்றனன் கறிவாயென் மகனே! கக

சொந்தமொழிதேசபக்திசொன்னேன்புறத்திணையில்
வந்ததுறை'நாடுவாழ்த்தல்'எதற்கோ? மகனே! கஉ

கைத்தொழிலேசெய்யக்கடவீரெனமொழிந்து
வைத்தவெனதுதிருவாய்மொழி'நோக்காய்மகனே! கங

கட்டாயக்கல்வியுலகர்க்களிக்கவென்கருத்தே
தட்டாதுகம்பரில்'நான்சாற்றிவைத்தேன் என் மகனே! கச

நல்லசரித்திரமெழுதநான்மறந்தேனோசெப்பிற்
கல்லில்வெட்டிவைத்தவற்றைக்கட்டுவித்தேன் என் மகனே!

நாவல்நடையேநடைக்குநல்லதென்பாரின்று; பண்டே
ஆவதறிந்தோதுகம்பராய்ந்ததொடைகாண் மகனே! கரு

இவ்வண்மேதற்காலவெண்ணமெலாமென்னகத்தே
செவ்வணமேதேர்ந்துதெளிகுவாயென் மகனே! கசு

சொல்லாழ்ந்து பொருளுயர்ந்த தாமொழியாங்கிலமென்பார்
எல்லாமெனைக்காணுமேதையுரைத்தலென் மகனே ! ௧௮

செகப்பிரியர் நாடகமேசீரிதென்பார் சிலம்புநூல்
அகத்திணை நாடகநூலறிவாரோ வென் மகனே! ௧௯

உன்மொழியை நன்குணர்ந்தயல்நாட்டார் வழங்கும்
பின்மொழியும் தேர்கதடை பேசுவதார் என் மகனே! ௨0

பிறமொழியிற் கண்ட பெரும்பொருள்கள் சோதரரும்
அறியும்வகை உன்மொழியால் ஆக்குவிப்பாய் என் மகனே! ௨௧

மொழியையுயர்த்தியுங்கள் முன்னைக்கலையுயர்த்தித்
தழையுமறிவுயர்த்தித் தரணியில்வாழ்வாய்மகனே! ௨௨

---

பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா.

---

தரவு.

இமயவடவரைகுமரியிருகடலுப்புடை சூழ்ந்து
தமனியநாடிதுவென்னும் தகைதருபாரதநாட்டின்
அழகுசெழுமுகமென்னவமைந்துதென்பாற்பொலிந்தோங்கி
யொழுகுபொன்னிபொருநைமுதலுயர்நதிபாய்வளம்படைத்துக்
குலவுதென்றல்வருபொதியில்கொல்லிமுதன் மலைபலவும்
சுலவுறவைந்திணைவளனுஞ்சுரந்துநலம்கொழித்துதவிச்
சரிதமுறுபதிபலவும்தழுவுதமிழகம்தழைப்ப
ஒருகுடைக்கீழ்த்தனியரசாயுவந்திருக்கும்தமிழ்த்தாயே! ௧

ஈன்றெம்மையெடுத்தேந்தியெழின்முலையாணமுதூட்டி
ஆன்றமழலையும்பயிற்றியகன்றிடுசொற்பொருளுணர்த்திப்

புல்லொழுக்கம்போக்குவித்துப்புகலுமுயிரினுஞ்சிறந்த
நல்லொழுக்கின் றலைநின்றுவிநவிலுமுலகியல்புணர்த்தித்
தன்னுணர்ச்சியெமக்களித்துத் தற்காலவுணர்ச்சியொடும்
முன்னுணர்ச்சியறிவித்துமுத்தியைப்புகாட்டினையால்!
அத்தகுநின் றிறம்வியந்தேயகமகிழ்ந்துமகிழ்சிறந்து
வைத்தபெருங்காதலினுல்வாயாரவாழ்த்துவமே. ௨

## காரிகைகள்.

சங்கநூல்முதலாகத் தனியிசைநாடகநூலும்
பொங்குவழிநூல்பலவும்புடைநூலும்படைத்தனையே! ௧

வேதமோவேதாந்தமோமனுநூலோபகவற்
கீதையோவெனுநகவிகள்கிளந்ததுநின் றிருவாக்கே! ௨

கதிரனைக்குக்கதுமெனவேகரந்தைருமிருபுலவர்
மதியனைவில்நவில்தெய்வவாக்கமைந்துநின் றனையே! ௩

சிறியசொலிற்பெரிதுணர்த்துந்திறம்நினக்கேயெனவிளக்கக்
குறியகுறள்கிரிலதாய்க்குலவயத்துப்படைத்தனையே! ௪

வேலழகியாருவந்தபெய்புனையோநலபரி
மேலழகியாருரையும்மேவினைநின்விறலினிதே! ௫

மெய்ஞ்ஞார்க்கினியாந்தம்வெறுவையுண்டிப்புவியில்
நச்சினார்க்கினியார்தங்கல்லுரைமுனைவினுதற்கே! ௬

மறைகேட்டுமையாளுன்மனைமொழிக்கேயமைதலினுல்
இறையோனுகமமுறைக்குமீற்றிலுன்னைப்பாடுதற்கே! ௭

ஆரியமாமறைதன்னையடிதொடமதியாது
சீரியநின்னடிதொடரும்திருயாளுன்னினிமைக்கே! ௮

நாகரிகம்காலத்தால்நவநவமாய்ப்புகலோர்ந்து
நீகலவைபெற்றோங்குநிலையமைந்துநின்றனையால்! ௯

வடமொழியிற்கடன்வாங்கிவந்தனையென்றுரைத்துநீ
கடன்கொடுத்ததறியாரைக்கடைக்கண்ணுற்காய்வாயே! ௧௦

சீரார்திரமிளமேதிரிந்ததுன்பேரென்பாரைப்
டாராளுமன்றெ''னைதுபதமெனவுள்நகுவாயே! ௧௧

பவஞானங்கெடத்தமிழ்மாபாடியஞ்செய்தருள்துறைசைச்
சிவஞானமுனிவரனின்சீர்விளக்கவருமகவே! ௧௨

தேனாட்சிசெயுமொழியாற்றிசைமணக்குங்கவிபாடும்
மீனாட்சிசுந்தரமால்விளங்குநினதொருமகவே! ௧௩

மொழிகாட்டுங்கவிநடையேமுரணென்போர்க்குரைநடையின்
வழிகாட்டும்அறுமுகநாவலனினதொருமகவே! ௧௪

அம்மே! நின்சுவைக்கடலின்ஆழ்ந்து'மனோன்மணியம்'நவில்
எம்மேசுந்தரமால்நின்னிசைவிளக்கவருமகவே! ௧௫

தரைமுழுதுப்புகழ்மதுரைசசங்கநிறுவியபாண்டித்
துரையெனும்பேர்நிலவுசெம்மல்தோன்றுநினதொருமகவே!

தீதின்றியுனைக்காக்குந்திறன்கொள்முத்துராமலிங்க
சேதுபதிராஜராஜேசுரனின்திருமகவே! ௧௭

## தனிச்சொல்

எனவாங்கு

நிலமண்டில ஆசிரியச்சுரிதகம்

வாழியசெந்தமிழ்மாதாவேயினும்
இன்னணம்பல்லாயிரமகார்தோன்றிநின்
பன்மாண் இயல்பெலாம்பழகிநின்றொல்புகழ்ப்
புதுவழியானேபுதுக்கிடவுலகின்
முழுமுதற்கடவுளைமுன்னுதும்ஒருநீ
வழிவழிசிறந்துவாழ்கமாவெனவே.

---

இராகம். காம்போதி—ஆதிதாளம்.

எந்தையுந்தாயும்மகிழ்ந்துகுலாவியியம்பியதிம்மொழியே
—அதன்
முந்துபல்லாயிரம்ஆண்டுகள்வாழ்ந்தோர்மொழிந்ததும்
[இம்மொழியே—அவர்
சிந்தையிலாயிரமெண்ணம்வளர்ந்துசிறந்ததும்இம்மொழியே
—இதை
வந்தனைகூறிமனதிலிருத்தியென்வாயுறவாழ்த்தேனோ
—இதைச்
செந்தமிழ்வாழியசெந்தம்ழ்வாழியஎன்றுசெபியேனோ? க.

இன்னுயிர்தந்தெமையீன்றுவளர்த்தருளீந்ததும்இம்மொழியே
—எங்கள்
அன்னையர்தோன்றிமழலைகள்கூறியறிந்ததும்இம்மொழியே
—அவர்
கன்னியராகிநிலவினிலாடிக்கழறியதிம்மொழியே—தங்கள்
பொன்னுடல்மேவப்புதுப்புனலாடிப்புகன்றதுமிம்மொழியே
—இதைச்
செந்தமிழ்வாழிய,செந்தமிழ்வாழியஎன்றுசெபியேனோ? உ

உ

கரந்தைத் தமிழ்ச்சங்கக் காரியதரிசி கனம்
R. வேங்கடாசலம்பிள்ளையவர்கள்
இயற்றியது

---

### தரவு

வளம்பெருகிமகிழ்பூத்தமாவிந்தியாமடந்தைக்
குளம்பொருவென்றுரைசான்றதென்னாட்டிடனேர்மொழியா
வின்னகையவிளையசிறுவிளங்குதலையேயென்ன
மென்மையினிமைமுதலாமேதக்ககுணங்கனிந்து
நுண்ணியநூற்கலையணிந்துநுவலரியாப்புகழ்சூடிக்
கண்ணியஞ்சேர்முதுகுடிக்குக்களைகணாந்தமிழ்த்தாயே!

குறிஞ்சிமுதலைவகையிற்குறித்ததிணைக்குடிவாழ்க்கை
நெருங்கிநெகிழாவன்பினிகழ்களவுகற்பென்றே
யிருதிறத்தொழுகலாற்றினிதொழுகிப்பெறும்பேரு
வருள்கனிந்தெப்பற்றுமறுத்தந்நிலையாலெலங்கிகரு
மற்றதிருவருட்பிழம்பையறிவுறுவாங்கந்தழியைப்
பெற்றுவருந்தமிழ்க்குடிக்குப்பிறங்கன்னையாமமிழ்தே!

### தாழிசை

தனித்திடினும்பிறமொழிக்கடலைப்பெயினுமொருநிலையா
வினித்துநினைக்கன்னிவரையியலாவென்பதுமென்னே. க

தொன்மைமுதற்பெறலனைப்பின்முறைகையுணரும்புலவர்நினைக்
கம்மையிலையெனத்தருக்கியறைவதுமோர்வியப்பன்றே. உ

முந்துதிருமுறைதிருவாய்மொழிகுறளாமுன்னூலைத்
தந்தவெமதாய்மொழிக்குத்தாய்மொழியோர்சேய்மொழியே.

இத்துணைத்தெய்புதுமையெனுமேதின்மொழிச்செருக்கெல்லே
அத்துணையுமான்றநினதமைமேவாருமங்நானே. ௪

எட்டின்முனமெழுதுமெழுந்தின்றுமெதிராற்றேறக்
காட்டுமினக்கந்நாள்வைகைக்கதையொன்றருமையதே. ௫

இழுமென்றவிழுமியநின்னெழுத்தொன்றுமொழியாய
தழல்வெம்மைதணிந்தாகினைத்தகையாததிசயமே. ௬

உலகறியாவொருகாலத்துளங்குறித்தவறங்குறித்த
நிலவியலாய்! னக்குநிகர்சேர்வார்நடுநிலேயோரே. ௭

அணிமறையாதியற்கைநலமான்றுதெரிபொருணூலிற்
கணிபொருளோகுளிர்நடையோகனிமனத்தைக்கவர்ந்திடலே

ஞாலமினைசினதருமைநாட்டுகெனினல்லிசையோர்
காலமுளப்பாங்குபிறநாட்டுபடங்காட்டுவரோ. ௯

என்விழுங்குமோரணமுன்னியம்புபலநூல்விழுங்க
மண்விழுங்குங்கடல்விழுங்குமலிபுகட்குமாறென்னே. ௧௦

MAHAMAHOPADHYAYA
U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS 41

தனிச்சொல்.

எனவாங்குச்

சுரிதகம்.

சிலவும்பலவும்சீர்தெரித்தேனும்
புகன்றோர்புலத்திற்பொருந்தளவலைக்
கலித்தொகைமுதலாக்காண்டகுசிறப்பி
னெண்மாண்புலநூலுள்ளுறையாய்ந்த
நல்லிசைப்புலவர் நயப்பினுமுரைக்க
வொல்லுமாறுணுதுனதுயர்புகழே.

---

௫

தனிப்பா.

அன்றாலின்கீழிறைவன் அழகியசெந்தமிழ்மணப்ப
தென்றேதென்றிசைநோக்கியிருந்தனன்காணம்மானை
என்றேதென்றிசைநோக்கியிருந்தனன்றானுமாயின்
மன்றேயுமாரியத்தின்வழக்கென்கொலம்மானை
வழக்கிழந்தேயன்றோவடக்கிருந்ததம்மானை.

---

# விசேடக் குறிப்பு.

---

௨

௧. முருகுவிரித்து—மணம்விரித்து; முருகக்கடவுளான் விரிக்கப்பெற்று.

முன்னன்பு—முதலன்பு; களவியல்முதற்கண் அன்பு என்னுஞ்சொல்.

௨. ஆங்கிலத்தில்—ஆங்கிலமொழிபோல; ஆங்கு ஆசை: இலத்தில்—வீட்டின்கண்.

அகத்தும் புறத்தும்—வீட்டிலும் வெளியிலும்; அகத்திணையிலும் புறத்திணையிலும்.

௩. தென்றிசையேயுயர்ந்தது—கந்தபுராணக்கதை; தென்றிசை மேன்மையுற்றது.

அம்மகுடமுனி—அழகியமுனிபுங்கவன், முனியரசு; அம்ம: வியப்பிடைச்சொல்; குடமுனி-கலசமுனி.

௪. வள்ளுவர்—திருவள்ளுவர்.

நால்வர்—சமயகுரவர்.

இவ்விரண்டும் உலகவழக்கையும் குறிக்கும்.

அம்மையழகியையுறல்—வீடுபேற்றிற்குச் சாதனமாகிய அழகுபொருந்தல்.

வனப்பெல்லாம்—அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு, என்னும் நூற்குரிய வனப்பெட்டும்.

௫. தமிழின் அவ்வை—தமிழ்த்தாய்; தமிழ்மூதாட்டியாராகிய ஔவையார்.

சிந்தாமணிதருவான் தெய்வமன்றோ—சிந்தாமணி, தரு, ஆன், தெய்வம் இவைகளாம்; சிந்தாமணி என்னும் காப்பியத்தைத்தரும் தெய்வம்

௩

1. பாஷைக்குச் செய்யும் கடமை.
2. ஆங்கிலேயரோடு நாம் சம்பாஷிக்க நேரும்பொழுது நமது பாஷையிலேயே பேசுவதாக யிருந்தால் அவர்களும் நமது பாஷையைக் கற்கவேண்டிவரும்.
3. 'வம்மின் புலவீர்நும்மெய்வருந்திக் கைசெய்தும் மினோ'—நம்மாழ்வார், ௩-ஆம்பத்து, ௯-ஆம் திருமொழி, ௬-ஆம் பாசுரம்.
4. 'கல்லாதுநிற்பார்பிறரின்மையின்'—கம்பராமாயணம், நகரப்படலம்: ௭௯-ஆம் பாட்டு.
5. அகலிகை வரலாறு முதலியவை.
6. ஷேக்ஸ்பியர்.
7. சிலப்பதிகாரம்.
8. மனம்.
9. சிவபூஜாகாலத்தில் முதலில் வேதம்ஓதிப்பின் தேவாரம் ஓதுதல் முறை.
10. பெருமாள் புறப்பாட்டில் முதலில் திருவாய்மொழி ஓதிக்கொண்டு செல்லப் பின்னால் வேதமோதிச் செல்லல் முறை.
11. Parliament. (பார்லிமெண்ட்.)